Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 28 ஆம் நாள் ஷவ்வால் 4 (10-4-62) செவ்வாய்க்கிழமை இதழ் 59




# மேயர் பிரச்னை: சமரச முயற்சி

## அதிகாலை வரை பேச்சுவார்த்தை

### 2 தமிழ் எம். பி. க்களும் கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண நகரமேயர் திரு. எம். ஜேக்கப்மீது ஒன்பது அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டுக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கும் மாநகரசபையின் விசேஷ கூட்டத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது.

இதற்கிடையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுமலேயே இப்பிரச்சினைக்கு சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் சென்ற இரண்டு தினங்களாக இரவுபகலாக நடைபெற்று வருகிறது. நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் இப்பேச்சுவார்த்தைகள் மாநகர சபை அங்கத்தவர் ஒருவருடைய இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இப்பேச்சுவார்த்தைகளில் மாநகரசபை அங்கத்தவர்கள் பலரும் முக்கிய அரசியல் கட்சிப் பிரமுகர்களும் இரண்டு எம். பி.க்களும் கலந்து கொண்டனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை (அதிகாலை 2 மணி வரை) பேச்சுவார்த்தைகள் முடிவடையவில்லை.

பேச்சுவார்த்தைகளில் சமரசம் ஏற்பட்டால் நம்பிக்கையில்லாத்தீர்மானத்துக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ள பிரேரணை இன்று வாபஸ் பெறப்படுமென நம்பப்படுகிறது.

"சமரச முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியளித்து விட்டதாகவேதோன்றுகிறது. சில சில நிபந்தனைகளில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது" என்று திரு. ஏ. ஜி. ராஜசூரியர் நள்ளிரவில் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

## ஸ்தலஸ்தாபன சபைகளிடம் பாடசாலைகள் பொறுப்பு

### கல்விக் கமிஷன் பரிசீலனை

கொழும்பு, திங்கள்

கல்வி அமைச்சின் பூரண கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையின் கீழும பாடசாலைகளை அன்றுடம் நடத்தும் பொறுப்பை ஸ்தலஸ்தாபன சபைகளிடம் ஒப்படைப்பதற்கான வாய்ப்புக்கள்பற்றி தேசிய கல்விக் கமிஷன் ஆராய்ந்து வருகிறது.

கல்வியின் வளர்ச்சியில் ஸ்தலஸ்தாபன சபைகளும் பங்கு கொள்வதனல் பிரிட்டனில் பாடசாலைத்திட்டத்தின் முன்னேற்றத்துக்கு பெருமளவு உதவி கிடைத்துள்ளதென்றும் சமூகம் முழுவதுமே அக்கறையெடுக்கக் கூடிய வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பது தான் காரணமென்றும் தேசிய கல்விக்சமிஷன் கருதுகிறது

ஆலோசனையிலுள்ள புதிய திட்டத்தின்படி பாடசாலை நல அபிவிருத்திச் சபைகளின் வேலைகளை இணைப்பதற்கு வசதியளிக்கக் கூடிய தானமாகாண கல்வி ஆலோசனை சபைகளையும் மாவட்ட கல்விச் சபைகளையும் நிறுவுவதற்கு வசதியளிக்கிறது.

## 100 அந்தர் கருவாடு

### நீதிபதியின் உத்தரவால் அழிக்கப்பட்டது

பாணந்துறை, திங்கள்

இரண்டாயிரத்து ஐநூற்று அறுபத்திரண்டு (2, 562) ரூபாய் பெறுமதியான கருவாடு மனிதர் உண்பதற்கு லாயக்கற்றதென்று வைத்திய அதிகாரிகள் அறிவித்ததைத்தொடர்ந்து அவைகளை அழித்துவிடுமாறு பாணந்துறை மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். இந்த உத்தரவுக்கிணங்க அவ்வளவு கருவாடும் அழிக்கப்பட்டது.

இந்த நூறு அந்தர் கருவாட்டை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமிருந்து மொரட்டுவை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் வாங்கியிருந்து.

---

## 3 வருடத்துக்குள் சந்திரனுக்கு பிரயாணம்

நியுயோர்க், ஏப். 9

சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் குறுகிய புது மார்க்கமொன்றை அமெரிக்க வான வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் இப்பொழுது தயாரித்து வருகின்றனர். இப் புதிய திட்டத்தின் படி இன்னும் மூன்று வருடங்களுக்குள் அமெரிக்கர் ஒருவர் சந்திரமண்டலத்துச்குப் பிரயாணம் செய்வார்.

## தகனக்கிரியையில் தேசியகீதம்

கொழும்பு, திங்கள்

'நமோ நமோ மாதா' என்ற இலங்கையின் தேசியகீதத்தை இயற்றிய கவிஞர் ஆனந்த சமரக்கோனின் தகனக்கிரியையின்போது, தேசியகீதம், அவர் இயற்றியபடியே வாசிக்கப்பட்டது.

## அல்ஜீரியாவில் நேற்று 26 பேர் பலி

அல்ஜிரியர்ஸ், ஏப். 9

அல்ஜீரியவிடுதலையைஎதிர்க்கும் ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினர் நேற்று அல்ஜீரியாவில் செய்த பாலாத்கார சம்பவங்களின் விளைவாக 26 பேர் கொல்லப்பட்டனர்; 67 பேர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட 26 பேர்களில் 21 பேர் முஸ்லிம்சள். காயமடைந்தவர்களில் 45 பேர் முஸ்லிம்கள்.

நேற்று அல்ஜியர்ஸில் 15குண்டுகளும் ஓரானில் 4 குண்டுகளும் கிழக்கு அல்ஜீரியாவில் ஒரு குண்டும் வெடிக்கப்பட்டன.

---

## யானை விரட்டல் பணம்

கொழும்பு, திங்கள்

தெதுருஓயா யானைவிரட்டலுக்காக சேர்ந்த பணத்தில் மிகுதியாகவுள்ளதெசகை, இவ்வருடம் நடைபெறவிருக்கும் யானை விரட்டலுக்குச் செலவிடப்படும் பணமும் பொருள்களும் தன்னுடைய பாதுகாப்பிலிருப்பதாக புத்தளம் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் யானை விரட்டல் சரிவர நிறைவேருதுபோனுல் அந்தப் பணத்தை என்னவிதமாகச் சிறந்த முறையில் செலவிடலாமென்று யானை விரட்டல் கமிட்டியிடம் ஆலோசனை கேட்பதற்கு அரசாங்க அதிபர் எண்ணியுள்ளார்.

---

## ஜெனிவா மகாநாடு

### பிரிட்டிஷ் பிரதிநிதி கருத்து

லண்டன், ஏப். 9

ஜெனிவாவில் நடைபெறும் 17 நாடுகள் படை குறைப்பு மகாநாட்டில் படை குறைப்பு பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அணு ஆயுதப் பரீட்சைத் தடைப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றமில்லையென்றும் ஜெனிவா மகாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் தலைமைப் பிரதிநிதி தெரிவித்தார்.

படை குறைப்பு சம்பந்தமாக சோவியத் யூனியனுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியுமென்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

காலஞ் சென்ற Howard சுப்பிரமணியம் அவர்களின் மனைவியும், இராசேஸ்வரி கந்தையா, Dr. S சின்னத்தம்பி (General, Hospital Colombo) அவர்களின் தாயாருமான கனகநாயகி அம்மாள் காலமாகி விட்டார். அன்னரின் மரணச் சடங்குகள் இன்று (10-4-62) காலை 9 மணிக்கு அவருடைய இல்லத்தில் நடைபெறும்.

அம்பல உடையார் வளவு
மல்லாகம்
10-4-62

## நேருவின் புதிய மந்திரி சபை விபரம் அறிவிப்பு

### சி. சுப்பிரமணியமும் டாக்டர் சுசீலாவும் புதிய மந்திரிகள்

### பாதுகாப்பு மந்திரி மேனன்தான்!

புதுடில்லி, ஏப். 9

இந்திய மத்திய அரசாங்கத்தின் புதிய மந்திரிசபை இன்று அறிவிக்கப்பட்டது 17 அங்கத்தவர்களைக் கொண்ட புதிய மந்திரிசபை நாளை பதவியேற்கும். துணை மந்திரிகள் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

புதிய மந்திரிசபையில் இருவர் மட்டுமே புதியவர்கள். தமிழ் நாட்டின் முன்னுள் நிதி, கல்வி மந்திரி திரு. சி. சுப்பிரமணியமும் டாக்டர் (திருமதி) சுசீலா நய்யாருமே புதிய மந்திரிகள் இருவர்.

திரு. சி. சுப்பிரமணியம் கனரக எஃகு இலாகா மந்திரியாகவும் திருமதி (டாக்டர்) சுசீலா நய்யார் சுகாதார மந்திரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. வி. கே. கிருஷ்ணமேனன் தொடர்ந்தும் பாதுகாப்பு மந்திரியாகவே இருப்பார். புதிய மந்திரிசபையிலும் நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய்தான்.

திரு. ஜகஜீவன்ராம் போக்குவரத்து மந்திரியாகவும் திரு. சுவர்ன்சிங் ரயில்வே மந்திரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பழைய மந்திரிசபையில் 12 பேர்கள் தானிருந்தனர்.

பிரதமர் நேரு வெளிவிவகாரம், அணுசக்தி ஆகிய இலாகாக்களை புதிய மந்திரி சபையிலும் தம்மிடமே வைத்துள்ளார்.

## பத்திரிகைகளை எடுக்கும் நகல் மசோதா தயார்

### மந்திரிசபைவிரைவில் விவாதிக்கும்

கொழும்பு, திங்கள்

பத்திரிகைகளை எடுக்கும் நகல் மசோதா விரைவில் மந்திரி சபையில் விவாதிக்கப்படவிருப்பதாகத்தெரியவருகிறது.

இரண்டு பெரிய பத்திரிகைக் கம்பனிகளின் பங்கு மூலதனத்தைப் பொதுஜனங்களுக்கு விற்றுவிட வகை செய்யும் விதத்தில் இம்மசோதா அமைந்துள்ளதாகத் தெரிகிறது.

எந்த ஒரு பத்திரிகைக் கம்பனியின் பங்கு மூலதனத்திலும் குறைந்த பட்சம் 90 சத விகிதமாவது இலங்கைப் பிரஜைகளிடம் இருக்க வேண்டுமென்று ஒரு ஷரதது கூறுகிறது.

இந்த மசோதாவில் செய்தி ஸ்தாபனங்கள் குறித்து எவ்வித பிரஸ்தாபமும் இலலை.

ஐந்து பேரடங்கிய இலங்கை பத்திரிகைச்சபை என்ற கூட்டு ஸ்தாபனமொன்றை கவர்னர் ஜெனரல் நியமிப்பார். இரண்டு பெரிய பத்திரிகை ஸ்தாபனங்களின் பங்குகளை இந்தச் சபை மேற்கொண்டு ஐந்து வருஷகாலத்துக்கு தர்மகர்த்தா ஹோதாவில் அவற்றை வகித்துவரும். இந்த ஐந்து வருஷ காலத்தில் இந்த கம்பனிகளின் பங்குகளை சபை பொது மக்களுக்கு விற்கும். ஒருவருக்கு 50,000 ரூபாய்க்கு மேற்படாமல் பங்குகள் விற்கப்படும். பங்கு விற்பனையில் கிடைக்கும் பணம் இக்கம்பனிகளுக்குக் கொடுக்கப்படும். 5 வருஷ கால முடிவில் விற்பனையாகாத பங்குகள் இக்கம்பனிகளுக்கே திருப்பிக் கொடுக்கப்படும்.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### மலிவு விற்பனை

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு பல ரகப் பிடவைகளின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆ. அப்பையா அன் கோ.
82, கே. கே. எஸ். ரோட்.
கிளை: 54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: ஆ. அப்பையா
செ. காசிப்பிள்ளை

### புற்றுநோய்

சித்த வைத்திய முறையிலே புற்றுநோய்க்கு

கைகண்ட மருந்து

"யோகீஸ்வர ?ச"

நேரில் கலந்து ஆலோசிக்கவும்

பொ. செல்லையா
ஆயுள்வேத புற்று நோய் நிபுணர்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

EL 647 மொறிஸ் மையினர் கார் நல்ல பாவிப்பில் நிற்கிறது. தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். K. எதிர்நாயகம், கொழும்புத்துறை ரோட், யாழ்ப்பாணம்.


# வெளியூர்களில் இளம்பிள்ளைவாதம்

## காலியில் 11 பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்

காலி, திங்கள்

11 பிள்ளைகளுக்கு இளம்பிள்ளை வாதநோய் கண்டுள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டுக் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த 11 பிள்ளைகளும் தனிப்பட்ட ஒரு வார்டில் வைக்கப்பட்டுள்ளார்கள். சுமார் 600 நோயாளிகள் இருந்து வரும் காலி ஆஸ்பத்திரியிலிருந்து இந்தப் 11 பிள்ளைகளையும் வேறு இடத்துக்கு அனுப்பி வைப்பதற்கு ஆலோசனை செய்யப்படுகிறது. காலிக்கு 4 மைல்களுக்கு அப்பால் உள்ள உனவத்துன்னை ஆஸ்பத்திரியில் இருந்தப் பிள்ளைகளை அனுமதித்து அந்த ஆஸ்பத்திரியை இளம்பிள்ளை வாதநோய் ஆஸ்பத்திரியாக மாற்றுவதெனக் காலிப் பகுதி சுகாதார அதிகாரிகள் யோசனை செய்துள்ளார்கள்.

ஹெருளையில் ஒருவருக்கு இளம்பிள்ளை வாதநோய் கண்டுள்ளது. இப்பகுதியிலுள்ள சிறுபிள்ளைகள் அனைத்துக்கும் வாதநோய் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

பண்டாரவளைக்குப் பெருந்தொகையானோர் விடுமுறையை கழிக்கச் சென்றுள்ளனர் நாட்டில் பரவி வரும் இளம்பிள்ளை வாதநோய்தான் இதற்குக் காரணம் பண்டாரவளையில் பெரியம்மை, கூவைக்கட்டு, பொக்குளிப்பான் ஆகிய நோய்கள் இருப்பதாகத் தெரிகிறது.

# கூட்டுறவுமுறையில் மேதின கொண்டாட்டம் இல்லை

## இடதுசாரிக் கட்சிகள் தனியாக கூட்டம் நடத்தும்

கொழும்பு, திங்கள்

இடதுசாரிக் கட்சிகள் கூட்டு முறையில் மே தின விழாவைக் கொண்டாட எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி, எல்.எஸ். எஸ். பி. எம். ஈ. பி, ஆகிய மூன்று கட்சிகளும் தனித்தனியாக மே தினத்தைக் கொண்டாடவிருக்கின்றன.

இந்த முயற்சியிலும் ஒரு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மே தினத்தன்று கூட்டம் கூடுவதற்கு 'கால்' பேஸ் மைதானத்தை வழங்குமாறு மூன்று கட்சியினரும் அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளனர். மூன்று கட்சியினரும் ஒரே திகதியில் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளமையால், எந்தக்கட்சிக்கு மைதானத்தை வழங்குவது என்பது பற்றி அரசாங்கம் தீர்மானிக்க முடியாமல் இருக்கிறது.

யு. என். பி. மே தினத்தை, கொம்பனித் தெரு, 'ஹைட் பார்க்'கில் கொண்டாடவிருக்கிறது.

## ஆசிரியர்கள் இட மாற்றம்

வவனியா, திங்கள்

வவனியாவிலுள்ள இராசேந்திரன் குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திரு. ஆ. இராமநாதன் மன்னார் பகுதியிலுள்ள விழாத்திக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கும், அதே பாடசாலையில் படிப்பித்த ஆங்கில உதவி ஆசிரியர் திரு. தருமலிங்கம் ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள கச்சிலை மடு அ. த. க. பாடசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தலைமையாசிரியர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் ஓர் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது. அன்னார்களின் சேவையைப் பாராட்டி தலைமையாசிரியரும், ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளும் பேசினர்.

## ஆசிரியர் பற்றுக்குறை

வவனியா, திங்கள்

வவனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர் பற்றுக் குறையை நீக்குமுகமாக வவனியா வித்தியாதிகாரி ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ள பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களை குறைவான இடங்களுக்கு மாற்றியுள்ளார்.

விடுமுறையில் இம்மாற்றங்கள் செய்தமையால் ஆசிரியர்களுக்கு எதுவித குறைபாடுகளும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா

ஜெனிவா, ஏப்.9

17 நாடுகளின் படைக் குறைப்பு மகாநாட்டில் கலந்து கொள்ளும் 8 நடுநிலைமை நாடுகள் அணு சோதனைக் தடை சம்பந்தமாக சமரச யோசனைகள் பற்றி ஆராய்ந்துவருகின்றன.

## தற்காலிக தலைவர்கள்

புதுடில்லி, ஏப். 9

லோகசபையில் சுதந்திராக் கட்சியின் தற்காலிகத் தலைவராக திரு.பி.கெ. தேவும், ராஜ்ய சபையில் அக் கட்சியின் தற்காலிகத் தலைவராக திரு. தயாபாய்படேலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஸ்கொட்லந்தில் இலங்கை தேயிலை பிரசாரம்

லண்டன், ஏப்ரல் 9

இவ்வாரம் ஸ்கொட்லந்து முழுவதும் இலங்கை தேயிலை பிரசாரம் ஆரம்பமாயிற்று. ஸ்கொட்லந்தின் உணவுக் கண்காட்சி நடைபெற்றுவரும் கெல்வின் கூடத்தில் இலங்கைத் தேயிலை நிலையம் இரு பெரிய "இலங்கை நாள்" காட்சிகளை நடத்தியது. இந்நிகழ்ச்சியின் போது கண்டிய நடனமொன்றும், சேலை அணிவகுப்பொன்றும் இடம்பெற்றன. இவ்விரு காட்சிகளையும் 5,000-க்கு மேற்பட்ட மக்கள் கண்டுகளித்தனர். உணவுக் கண்காட்சியில், இலங்கைத் தேயிலை நிலையம் ஒவ்வொரு நாளும் இங்கு விஜயம் செய்வோருக்கு 2,000 கோப்பைகள் கலப்பற்ற இலங்கை தேனீரை கொடுத்தது. கண் காட்சி முடியும்பொழுது 30,000 கோப்பை தேனீர் கொடுக்கப்பட்டிருக்கும்.

ஸ்கொட்டிஷ் பிரசாரம் ஜூன் மாதம் முடியும்வரை தொடர்ந்து நடைபெறும். நாடு முழுவதிலுமுள்ள கடைக்காரர்களுக்கு பிரசார விளம்பரங்கள் அனுப்பப்படும். அத்துடன் இலங்கைத் தேயிலையைப் பற்றிய பத்திரிகைகள், டெலிவிஷன் பிரசாரங்களும் இடம் பெறும்.

## நீரை கண்டுபிடிக்கும் அபூர்வ கருவி

மூனிச், (பாட்) ஏப்ரல் 9

பூமிக்கடியில் எங்கு தண்ணீர் கிடைக்கிறது என்பதைக் கண்டுபிடித்துச் சொல்ல சில நிபுணர்கள் இருந்துவருகிறார்கள். "ஓய்" எழுத்துப்போன்ற குச்சிகளைக்கொண்டு இவர்கள் இந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சொல்கின்றனர். ஆனால் மூனிச்நகரைச் சேர்ந்த பௌதிக நிபுணரான டாக்டர் ஜோஸப் விஸ்ட் என்பவர் பல வருடங்கள் ஆராய்ச்சிகள் செய்து ஒரு அபூர்வ கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். இக் கருவிக்கு "ஸ்கிமிட் தண்ணீர் காட்டி" என்று பெயர். பூமியின் காந்தசக்தி அழுத்த நிலைமை ஆகியவற்றை இக் கருவி உணர்த்துகிறது. 65 அடிக்கும் கீழ் உள்ள தண்ணீர் இருக்கும் இடத்தையும் இக் கருவி எளிதில் உணர்த்துகிறது. கிணறுகள் வெட்ட இக் கருவி பெரிதும் பயன்படுகிறது.

## இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 28-ந் தேதி செவ்வாய்க்கிழமை (10-4-62)ஹிஜ்ரி வருடம் 1381 துல்கஃதா மாதம் 4-ம் பிறை.

இன்று ஷஷ்டி பகல் 5-32 வரை, பின்னர் ஸப்தமி, பகல் 1-21 வரை மிருகசீரிடம் அதன் பின்னர் திருவாதிரை, சித்தயோகம், ஷஷ்டிவிரதம். இராகு காலம் 3-56 முதல் 4-36 வரை.

அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் சுப கருமங்களை இவர்கள் மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

மிருகசீரிடம்—திருவாதிரை: இன்று இவர்களுக்கு நன்முயற்சி, தொழில் நலம், இனசன உதவி, பிதாவழி சிந்தனை, தேகநலக் குறைவு ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: இனசன விரோதம், பதட்டப் பேச்சு, நல்லோர் ஆதரவு, சுபம்.

இடபம்: ஞாபகமறதி, பணமுடை, தொழில் அபிவிருத்தி, உடல்நலக் குறைவு.

மிதுனம்: தொழில் மந்தநிலை, குடும்ப நிம்மதி, சுபகருமம், கவலை.

கடகம்: குடும்ப நலம், சந்ததி உதவி, உறவினர் பகை, தொழில்ஊக்கம், ஆரோக்கியம்.

சிங்கம்: கடும் உழைப்பு; பலன் தாமதம், பண உதவி, தைரியம், செலவு.

கன்னி: குடும்பநலக் குறைவு, புதியன பனிதம், வர்த்தகலாபம், பிரயாணக் கஷ்டம்.

துலாம்: வேலை தப்பி உண்டி, உடல்நலக் கேடு, பிரயாண நன்மை, சொத்து சேர்க்கை.

விருச்சிகம்: வித்தியாவிருத்தி, மதிப்பு, பெரியவர் பகை, பண வரவு, சுகம்.

தனு: கடன் வரவு, இன்ப சிந்தனை, குடும்ப சுகக்கேடு, தொழில் சிந்தனை.

மகரம்: ஞாபகமறதி, பொருள் நட்டம், வாக்கு வன்மை, மதிப்பு, பகை.

கும்பம்: விதண்டாவாதம், சமூக மதிப்பு, வித்தியாலாபம், பணவரவு.

மீனம்: மதிப்புயர்ச்சி, பிருதுவழி சிந்தனை பெண் தொல்லை, வாக்குவெற்றி.

## கிரிக்கெட்

கராச்சி, ஏப்ரல். 9

பாகிஸ்தான் கிரிக்கெட்கோஷ்டிக்கும், காமன்வெல்த் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றுவரும் விளையாட்டுப்போட்டியில் பாகிஸ்தான் 2-ம் இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 149 ரன்கள் எடுத்தது. முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 310 ரன்கள் எடுத்தது. காமன்வெல்த் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்திற்கு 420 ரன்கள் எடுத்தது.

## காண்ட்ராக்டர் நியூயோர்க் புறப்பட்டார்

பார்படோஸ், ஏப். 9

இங்கு சிகிச்சைபெற்றுவந்த இந்திய டெஸ்ட் கிரிக்கெட் கோஷ்டியின் காப்டன் கண்ட்ராக்டர், நேற்று நியூயோர்க்குக்குப் புறப்பட்டார். அங்கு வைத்தியப் பரிசோதனை செய்யப்பட்டபின் அவர் ஐரோப்பா சென்று ஓய்வெடுத்துக்கொள்வார்.

## அமெரிக்க அணு சோதனை

வாஷிங்டன், ஏப். 9

அமெரிக்கா, அணு சோதனையை மீண்டும் ஆரம்பிக்கும் வேளை நெருங்கிவருவதையொட்டி லண்டனுக்கும், வாஷிங்டனுக்குமிடையே கருத்துப் பரிவர்த்தனைகள் நடைபெற்றுவருகின்றன.




இன்றே எழுதி ராணி பரிசுத் திட்டப் பத்திரத்தைப் பெறுங்கள்

### ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்திற்கு

சருமத்தின் இரகசியங்களை நவீன விஞ்ஞானம் அறிந்து வைத்திருக்கிறது. ராணி சந்தன சோப்பை உபயோகித்தீர்களானால், ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்தை நீங்களும் பெறலாம். ராணி சோப், சருமத்தை ஊடுருவிச் சுத்திகரித்து சகல அழுக்குகளையும் வெளியேற்றுகிறது. பின்னர், ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய் வகைகள் மூலம், சருமத்தை மிருதுவாக்குகிறது. அழகின் இரகசியம் சருமத்தை ஊடுருவிச்சுத்திகரிக்கும் சோப். ராணி, இதற்கெனவே உருவான சோப்.



## ராணி சந்தன சோப்

தயார் பெட்டி 21, கொழும்பு

# அல்ஜீரிய ஒப்பந்தத்துக்கு பிரெஞ்சு மக்கள் ஆதரவு

## ஜெனரல் டிகாலுக்கு விரிவான அதிகாரம்

### வாக்களிப்பு நிலையங்களில் பிளாஸ்டிக் குண்டு வீச்சு

பாரிஸ், ஏப்ரல் 9

**பிரெஞ்சு–அல்ஜீரிய யுத்த நிறுத்த ஒப்பந்தம்பற்றி, பிரான்சில் நடைபெற்ற வாக்களிப்பில் ஜெனரல் டி காலுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைத்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.**

இந்த ஒப்பந்தத்தை பார்லிமெண்டின் சம்மதம் இன்றி, கட்டளைமூலம் நிறைவேற்றவும், அல்ஜீரியாபற்றி உரிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் ஜெனரல் டி காலுக்கு இந்த வாக்களிப்புமூலம் விரிவான அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வாக்களிப்பு விபரம் இன்று அரசாங்க ரீதியில் அறிவிக்கப்படும்.

அல்ஜீயர்ஸில் நேற்று பயங்கரவாதிகளின் தாக்குதல் தீவிரமடையும் எனக் கருதி முக்கிய இலக்குகளில் பிரெஞ்சு ராணுவம் நிறுத்தப்பட்டிருந்தது. ஓ. ஏ எஸ். பயங்கரவாதிகள் ஓரிடத்தில் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். ஓரானில் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தையும் பயங்கரவாதிகள் தாக்கினர். அப்போது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஒரு சிவிலியனும், ஒரு பயங்கரவாதியும் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் டூனிஸிலுள்ள அல்ஜீரிய தேசியத் தலைவர்கள், நாட்டின் வருங்காலம்பற்றி ஆலோசனை நடத்தியிருக்கிறார்கள் சுதந்திரப் போராட்டம் நடத்திய தேசிய விடுதலை முன்னணியை ஒரு பெரிய அரசியல் கட்சியாக மாற்றுவதுபற்றி அவர்கள் ஆலோசனை நடத்தினர்

நேற்று பாரிசில் 4 வாக்களிப்பு நிலையங்களில் பிளாஸ்டிக் குண்டுகள் வீசப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பாதுகாவல் பலப்படுத்தப்பட்டது.

## கடல் கொந்தளிப்பினால் ஏற்படும் வெள்ளம்

### மேற்கு ஜெர்மனியில் தடுப்பு நடவடிக்கைகள்

ஹாம்பர்க் (டாட்) ஏப். 9

கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு ஜெர்மனியில் வடக்கு பகுதியில் கடல் நீர் உட்புகுந்து வெள்ளக் காடாக ஆக்கியதினால் சுமார் 300 பேர் மாண்டதுடன் 75,000 பேர் வீடிழந்து தவிக்கும் பரிதாப நிலைமை ஏற்பட்டது. இந்த வெள்ளத்தினால் ஏற்பட்ட பொருட் சேதம் பல லட்சக்கணக்கான மார்க்குகள் மதிப்புக் கொண்டதாகும். பல நூற்றுண்டுகளில் இம்மாதிரியான பேராபத்து ஜெர்மனியில் ஏற்பட்டதேயில்லை. மிகக் கடுமையான வெள்ளம் 1825-ல் ஏற்பட்டது. அதில் கூட இவ்வளவு சேதம் ஏற்படவில்லை. கடல் மட்டம் சாதாரண அளவைவிட 3.95 மீட்டர் உயரம்தான் அதிகரித்தது. ஆனால் சமீப வெள்ளத்தின்போது கடல் மட்டம் 4 மீட்டர் உயர்ந்துவிட்டது. மதகுகள் மற்று தடுப்புகள் எல்லாமே சேதமடைந்துவிட்டன. சுமார் 100 மைல் தூரம் உள் பகுதியிலுள்ள ஹாம்பர்க் கூட இதனால் பாதிக்கப்பட்டது.

1953-ல் டச்சு கடல் கொந்தளித்து, ஏற்பட்ட வெள்ளத்தினால் நெதர்லாந்தில் 1835 பேர்களும், இங்கிலாந்தில் 300 பேர்களும் மாண்டனர். இதையொட்டி எடுக்கப்பட்ட வெள்ளத் தடுப்பு வேலைகள் எல்லாம் அநேகமாக முடிந்துவிட்டன. 9000 சதுர கிலோ மீட்டர் பகுதியில் கடல் நீர் உட்புகா வண்ணம் தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டன. மதகுகளை எல்லாம் பலப்படுத்துவதற்காக மேற்கு ஜெர்மன் அரசாங்கம், 77 கோடி மார்க்குகளை செலவிட அனுமதித்தது. சமீபத்தில் ஏற்பட்ட ஆபத்தான சம்பவம் நடைபெறுவதற்கு முன்புவரை 55.5 கோடி மார்க்குகள்வரை செலவிடப்பட்டுள்ளன. திட்ட வேலைகள் முடியு முன் வெள்ளம் ஏற்பட்டுவிட்டதினால் இந்த ஆபத்தை தடுக்க முடியாமல் போய்விட்டது.

ஹாம்பர்க் பகுதியில் மதகுகளைப் பலப்படுத்தும் வேலை இன்னும் முன்னதாகவே மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் பெரும்சேதம் ஏற்பட்டதைத் தடுத்திருக்கலாம். ஆனால் பெரும் அளவில் இத்தகைய வெள்ள ஆபத்து ஏற்படும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை சீக்கிரமாக காரியங்களை மேற்கொண்டு முடிக்கவேண்டும் என்ற படிப்பினை இந்த பெரும் ஆபத்திலிருந்து அறியப்பட்டுள்ளது. மக்களுக்கு இத்தகைய ஆபத்து ஏற்படும் என்பது முன்னதாக எச்சரிக்கப்பட்டது. ஆனால் வான ஆராய்ச்சி, பூதத்துவ நிபுணர்கள்கூட இவ்வளவு பெரும் அளவில் ஆபத்து ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை. அபாய ஒலி, மாதா கோயில் மணி அடிப்பு இவை எல்லாம் வெள்ளத்தின் ஒலியில் அமுங்கிவிட்டன. தூக்கத்தில் ஆழ்ந்திருந்த நகரை சரிவர முன்னதாக எச்சரிக்க முடியாமல் போய்விட்டது. மனிதன் முயற்சியிலிருந்து தளரக்கூடாது என்பது இதிலிருந்து கிடைத்த மாபெரும் படிப்பினையாகும்.

### குடியேற்ற கட்டுப்பாடு மசோதா நிறைவேற்றம்

லண்டன், ஏப்ரல் 8

சாம்ராஜ்ய குடியேற்றக் கட்டுப்பாடு மசோதா மூன்றுவது முறையாக வாசிக்கப்பட்டு பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது. தற்போது அரச அனுமதிபெற எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மசோதா குடியேற்றத்தை அடியோடு தடைசெய்யவில்லையென்றும், ஆனால் சில காலத்திற்குக் கட்டுப்படுத்தியுள்ளதென்றும் இதனால் பிரிட்டனில் குடியேற்றக்காரர்களுக்கு இட வசதியின்மையை தெளிவுபடுத்துகிறதென்றும் டுவிட்ஸ்மூர் பிரபு கூறினர்.

1961-ம் ஆண்டில் மேற்கு இந்தியா, கிழக்கு, மேற்கு ஆபிரிக்கா, மத்தியதரைப் பகுதி, சாம்ராஜ்யத்தின் ஆசிய மாவட்டங்கள் ஆகியவற்றிலிருந்து 19,000 பேர் குடியேறியுள்ளனர். இத்தொகையை 1962-ம் ஆண்டில் இருமடங்காக (38,000) ஆகக் கூடியது.

சாம்ராஜ்ய குடியேற்ற வாசிகளின் வேலையற்றோரின் தொகை மார்ச் 12ம் திகதியன்று 32,000. ஆனால் நவம்பரில் இத்தொகை 10,000 ஆகக் கூடியது.

## பனிக்கட்டிகள்மீது ஓட "ஐஸ டயர்"

மூனிச், (டாட்) ஏப். 9

பனியடர்ந்த நாடுகளில், உறைந்த பனிமீது மோட்டார் வண்டிகளை ஓட்டுவது மிகவும் கஷ்டம். அனேக மாதங்கள் உறைபனி இருக்கும்போது பனிக்கட்டிகளைப் பெயர்த்துக் கொண்டு செல்லும் விசேஷ டயர்களை மோட்டார் வண்டிகளில் பொருத்தவேண்டியிருக்கும் பனிக்கட்டி இல்லாத நல்ல ரஸ்தாக்களில் ஓட்ட வேண்டுமென்றால் இந்த டயர்களை மாற்றவேண்டியிருக்கிறது. மூனிச் கம்பெனி இப்போது ஒரு விசேஷ டயரைக் கண்டுபிடித்துள்ளது. இதை உபயோகித்து ரஸ்தாக்களில் வண்டியை ஓட்டலாம். உறைபனியடர்ந்த இடத்தில் வண்டி போக நேர்ந்தால் ஒரு விசையை முடுக்கினால் டயர்களின் வெளிபுறத்தில் ஈட்டிகள் போன்ற சாதனம் நீட்டிக்கொள்ளும். உறைபனியை உடைத்துக்கொண்டு மோட்டார் போக இது உதவுகிறது. இதற்கு "ஐஸ் டயர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## மேற்கு ஜெர்மனியில் 24,000 அயல்நாட்டு மாணவர்கள்

பான், (பாட்) ஏப்ரல் 9

மேற்கு ஜெர்மனியில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் இப்போது 97 நாடுகளைச் சேர்ந்த சுமார் 24,000 மாணவர்கள் பயிற்சிபெற்று வருகிறார்கள். 1958-ம் வருஷம் முதற்கொண்டே மேற்கு ஜெர்மனியில் பயிற்சிபெறும் அயல்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை வருஷா வருஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மேற்கு ஜெர்மனி சர்வதேச முக்கியத்துவமுள்ள நாடாக இத்துறையில் விளங்கிவருகிறது. ரைன் நதியிலிருந்து எல்ப் நதிவரை வியாபித்துள்ள பிரதேசத்தில் படிக்கும் ஒவ்வொரு 13 மாணவர்களிலும் ஒருவர் அயல்நாட்டிலிருந்து வந்தவர்களே.

## லோகசபை எதிர்க்கட்சி

கோழிக்கோடு, ஏப். 9

இந்திய லோகசபையில் கம்யூனிஸ்ட் கட்சிதான் பிரதான எதிர்க்கட்சியாக விளங்குமென்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் தெரிவித்தார். லோகசபையில் 30 கம்யூனிஸ்ட் எம். பி. க்களுடன் 5 சுயேச்சை எம். பிக்களும் ஒத்துழைக்க உறுதியளித்துள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பார்லிமெண்டரிக்குழுத் தலைவர், உப தலைவர், கொறடா ஆகியோர் இம்மாதம் 13-ந் திகதி தெரிவு செய்யப்படுவர்.

## லண்டன் வாத்திய கோஷ்டி

கொழும்பு, திங்கள்

94 கலைஞர்கள் அடங்கிய லண்டன் வாத்தியக் கோஷ்டி ஒன்று ஆஸ்திரேலியாவிலிருந்து இன்று கொழும்பு வந்தது.

## புறக்கோட்டை பகுதியில் கருவாடு பதுக்கல்

### வர்த்தகர்கள்மீது விசாரணை நடக்கும்

கொழும்பு, ஞாயிறு

உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரிகள் சிலர் சமீபத்தில் நடத்திய திடீர் பரிசோதனையொன்றின் போது, கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் சுமார் 5 தொன கருவாடு பதுக்கி வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

புறக்கோட்டை வியாபாரிகள் சிலர் ஒழிவு மறைவாகப் பெருந்தொகையில் கருவாடு வைத்திருந்ததை உணவு இலாகா அதிகாரிகள் கண்டுபிடித்தனர். ஒரு சில வியாபாரிகள் தமது கருவாட்டு ஸ்டாக்குகளை இலாகா அதிகாரிகளிடம் கொடுத்துவிட மறுத்தார்கள். உணவுக் கமிஷனர் பொலிஸுக்குத் தகவல் கொடுத்ததன் பேரில் பரிசோதனை நடாத்தியவர்களுக்குப் பொலிஸ் உதவியும் கிடைத்தது.

வியாபாரிகள் பலரின் கடைக்குப் பின்புறமாகக் கருவாடு மறைத்துவைத்திருக்க காணப்பட்டதென்றும், அவற்றைப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுகளைக் காண்பிக்கும்படி, வியாபாரிகளைக் கேட்டபோது, அவர்களால் அவ்வாறு காண்பிக்க முடியவில்லையென்றும் உணவு இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஒரு லொறி கொள்ளக்கூடிய கருவாடு பறிமுதல் செய்யப்பட்டு கூ. மொ. வி. ஸ்தாபனத்திடம்பொதுமக்கள் விநியோகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளின் 'லைசென்ஸ்' சட்டத்தின் கீழ், கருவாடு பதுக்கல் செய்த வியாபாரிகள் விசாரணை செய்யப்படுவர் என வர்த்தக உணவுக் கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன கூறியுள்ளார்.

## ரயில் பாதையில் விழுந்து கிடந்தார்

### ஆனால் எவரும் காப்பாற்றவில்லை

பண்டாரவளை, திங்கள்

"பண்டாரவளை ரயில் பாதையில் இறந்தவர் விழுந்து கிடந்த சமயம், அந்த இடத்தில் 50க்கு அதிகமானோர் குழுமி இருந்தனர். ஆனால் விழுந்தவரைக காப்பாற்ற எவரும்முன்வரவில்லை" என்றுகறுப்பன் ராமசாமி (வயது 65) என்பவரின் மரணம் குறித்து நடைபெற்ற மரணவிசாரணையின்போது திடீர் மரண விசாரணை அதிகாரி முகாந்திரம் எல். ஜே. டபிள்யு. குணவர்த்தன கூறினர்.

பண்டாரவளை நகரசபை தொழிலாளியான ராமசாமி, தனது மாதச் சம்பளத்தைப் பெறுவதற்கு நகரசபைக்குச் சென்றாரென்றும், பணம் கிடைக்காததால் மனமுடைந்து வீடு திரும்பினாரென்றும், ரயில் பாதை வழியாக சென்று கொண்டிருந்த சமயம், ரயிலொன்றினால் மோதப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

அவர் ரயில் பாதையில் மயக்கமான நிலையில் விழுந்து கிடந்த சமயம், ஏராளமானோர் இறந்தவரைப் பார்த்துச் சென்றனர். ஆனால் யாரும் பொலிசாருக்கோ அல்லது ஆஸ்பத்திரிக்கோ இது சம்பந்தமாகத் தெரிவிக்கவில்லை.

இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் பொலிசார் ராமசாமியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் அங்கு அனுமதிக்க முன்னரே ராமசாமி மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி விபத்தினால் மரணம் ஏற்பட்டதென தீர்ப்பளித்தார்.

## ஜீ. ஸீ. ஈ. சாதாரண பரீட்சைகள்

### வருடம் ஒருதடவை நடத்த பிரேரணை

கொழும்பு, திங்கள்

ஜீ. சி. ஈ. (சாதாரண) பரீட்சையை வருடமொன்றுக்கு ஒரு தடவை மட்டும் நடத்துவது என்ற பிரேரணையொன்றைப்பரீட்சைப்பகுதிதேசியகல்விக்கமிஷனுக்குச்சமர்ப்பித்துள்ளது.

இப்போது, ஆகஸ்டிலும், டிசம்பரிலுமாக வருடமொன்றுக்கு இரு தடவைகள் இந்தப் பரீட்சை நடாத்தப்படுகிறது. டிசம்பர் பரீட்சையில் தேறாதவர்களுக்கென்றே ஆகஸ்ட் பரீட்சை நடாத்தப்படுகிறது.

வருடாவருடம் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுபவர் தொகை அதிகரித்து வருவதால் இரு தடவைகள் பரீட்சை நடாத்துவது பெரிதும் கஷ்டமாக இருக்கிறதெனப் பரீட்சைப் பகுதி சுட்டிக் கூறியுள்ளது. ஒரு தடவை மட்டும் பரீட்சை நடாத்தினால் எதுவித தடங்கலிலுமின்றிப் பரீட்சை முடிவுகளை வெளியிட முடியும் எனவும் பரீட்சைப் பகுதி கூறியுள்ளது.

கடந்த டிசம்பரில் 154,000 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாகவும் இந்தப் பரீட்சை முடிவுகளை மேமாதம் வரை வெளியிட முடியாமலிருக்கின்றதென்றும் ஆகஸ்ட் பரீட்சை விண்ணப்ப திகதியை நீட்டி வைக்கஇருப்பதாகவும் பரீட்சைப் பகுதி மேலும் தெரிவித்துள்ளது.

## மலையேறும் கோஷ்டி

புதுடில்லி, ஏப் 9

இந்திய மலையேறும் கோஷ்டி இமயமலையின் மேற்கு முகட்டில் 22,300 அடி உயரத்தில் தமது 4-வது முகாமை அமைத்துள்ளது.

## இந்திய ஆலோசனை

புதுடில்லி, ஏப். 9

கோலாலம்பூருக்கருகே அமைக்கப்படவிருக்கும் மலாயா ரசாயன உர கார்ப்பரேஷனுக்கு, இந்தியாவின் ஆலோசனை கோரப்பட்டிருக்கிறது.

**மணி வாக்கு**

"அன்பு உள்ள இடத்தில் உண்மையான வாழ்க்கையைக் காணமுடியும்".


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 28உ (10-4-62)


## ரூ. 5 கோடி கடன்

ஐந்து கோடி ரூபாய் கடன் வேண்டுமென்று, சர்வதேச கடனுதவி நிதியை இலங்கை கேட்டிருந்தது. இலங்கையின் இந்தக் கோரிக்கையைப் பற்றி ஆராய்ந்த அந்த நிதியின் அதிகாரியொருவர், இலங்கை அரசாங்கம் எடுக்கும் பல பொருளாதார நடவடிக்கைகள் சரியான முறையில் இருப்பதாயும், ஆகவே இலங்கையின் இக்கோரிக்கையை நிறைவேற்றலாமென்றும் நீண்டதோர் அறிக்கையில் தெரிவித்திருக்கின்ருர். நிதியின் நிர்வாக சபையினர், இந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, இலங்கைக்கு ஐந்து கோடியையும் அனுமதிக்கக் கூடும். அந்த மட்டில் நல்லதே.

இலங்கையின் ஏற்றுமதியை விட இறக்குமதி மதிப்பு அதிகமாக இருப்பதால் அதை சரிக்கட்டவே இக் கடன் வாங்கப்படுவதாகத் தெரிகிறது. ஏற்றுமதியாகும் தேயிலை, ரப்பர், தெங்குப் பொருள்களின் விலை வாசிகள் வீழ்ச்சியடைந்தால், இலங்கையின் ஏற்றுமதி மதிப்புக் குறைந்துவிட்டது. இதனல் பணச் சங்கடம் ஏற்பட்டுள்ளது. முன்னர் இவ்வித சங்கடம் ஏற்பட்டபோது, அரிசி விலையை திரு. டட்லி சேனநாயக்கா உயர்த்தியதாயும், அதனல் கலவரங்கள் ஏற்பட்டதாயும், பொதுமக்களின் அத்தியாவசிய உணவுப் பொருளான அரிசியின் விலையைத் தாம் உயர்த்தப் போவதில்லையென்றும், வேறு விதங்களில் இந்த நெருக்கடியை சமாளிக்கப் போவதாகவும் நிதி மந்திரி ஒரு கூட்டத்தில் அறிவித்தார். அரிசி விலையை உயர்த்தாதது வரவேற்கத்தக்கதே. ஆனல் இன்றைய சோதனை காலத்தை சமாளிப்பதென்பது சுலபமன்று.

இப்போது வாங்கும் ஐந்து கோடி ரூபாய் கடன், அது அனுமதிக்கப்பட்டாலும், இலங்கையின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க வெகுவாக உதவப்போவதில்லை. நமக்குத் தேவையானவற்றை கூடுமானவரை நாமே உற்பத்தி செய்துகொள்ளுவதில் தான், இப்பிரச்னை தீரமுடியும். அன்று நாம் குறிப்பிட்டது போல் ஜனத்தொகையும் அதிகரித்துக்கொண்டுபோகிறது. ஆகவே உணவு முதலிய அத்தியாவசிய தேவைகளை இங்கு உற்பத்திசெய்ய, இதுவரை என்றுமில்லாதபடி, அசாதாரண முயற்சிகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஆனல் துரதிருஷ்டவசமாக இன்றுள்ள அரசியல் தொழில் சூழ்நிலை அவ்வித முயற்சிக்கு உதவியளிப்பதாக இல்லையென்றே அஞ்சுகிருேம். எல்லாக் கட்சிகளும இவ்விஷயத்தில் ஒத்துழைத்து, நாட்டின் இயற்கை வளத்தையும், ஆள் பலத்தையும் பூரணமாகப் பயன் படுத்தினலே, உணவு உற்பத்தி பெருக முடியும். இதை அரசாங்கக் கட்சி உணர்ந்து, விரிவான மனப்பான்மையைக் கொண்டு, காரியங்கள் செய்ய முன்வரவேண்டும். உணவு உற்பத்தி, உயிர் போன்ற பிரச்னை. அரசியல், தொழில் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்த்து, உணவு உற்பத்தியில், எல்லாருட்டய ஒத்துழைப்பையும் பெற எவ்வளவு தூரம் அரசாங்கக்கட்சியால் முடிகிறதோ அவ்வளவுக்கு, இலங்கையின் எதிர்கால பொருளாதாரமும் சுபீசமும் அடங்கியிருக்கும்.

# வைத்தியக்கலையின் தந்தை

## இன்று ஹனிமன் பிறந்தநாள்

— டாக்டர் பி. ஞானப்பிரகாசம் —

குழந்தையின் நோயைக் குணமாக்கத் தாய் மருந்துண்பதைப் பலரும் அறிந்திருப்பார்கள். ஆனல் மனிதகுலத்தின் நோய்களைக் குணமாக்கும் வழிகாணத்தானே மருந்தையுண்டு ஆராய்ச்சி செய்த மகானைப்பற்றிப் பலர் அறிந்திருக்கமாட்டார்கள். இந்த ஆராய்ச்சியிலிருந்தோ ஹோமியோபதி என்னும் உண்மை நோயகற்றுங்கலை அல்லது வைத்திய சாஸ்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

யுகங்கள் சென்ருலும் மாற்றமடையாத (நிரந்தர) சிகிச்சை முறையை சிறப்பாகவுடையது இது. ஹோமியோபதி மருந்துகள் வியாதியை வேரோடகற்றி ஆரோக்கிய நிலைமையை மீண்டும் ஸ்தாபிக்கும் தீவிர சக்தி வாய்ந்தவைகள். தீங்குண்டாக்கும் இயல்பு சிறிதுமற்றவை.

இப்படி ஒப்புயர்வற்ற மிகச் சிறப்பு வாய்ந்த வைத்திய சாஸ்திரத்தை மனிதகுலத்திற்களித்த அண்ணல் ஹனிமன் அவதரித்த புனித தினம் ஏப்பிரல் 10-ம் திகதியாகிய இந்நாள். (இந்தமகானின் ஜனனம் ஏப்பிரல் 10-ம் திகதி 1755-ம் ஆண்டு) இந்நாளை உலகிலுள்ள ஹோமியோபதியர்களும் அனுதாபிகளும் சிறப்பாகக் கொண்டாடிவருகிருர்கள.

மனிதகுலம் பூமியில் இருக்கும்வரை நிரந்தரமாக புகழுடம்புடன் வாழ்ந்துவரும் கருமவீரரின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு நாம் அருகதையற்றவர்கள். அவர் மனிதகுலம் கைகூப்பித் தொழ வேண்டிய அவதார புருஷர். எனவே ஏப்ரல் 10-ம் திகதியை நாம் அவருக்கு வணக்கம்செய்யும் ஓர் புண்ணிய தினமாகக்கொள்வோமாக.

மனிதசமுதாயத்தின் குரூரத்துவமோ, இறைவனின் இரக்கமற்ற செயலோ நாம் அறியோம். இப்படிப்பட்ட பெரியோர்களின் வாழ்வு மிகவுந் துன்பம் நிறைந்ததாகவேயிருந்திருக்கிறது. ஹனிமன் பிறந்த நாட்டில் வாழமுடியவில்லை. அயல்நாட்டில் பல இன்னல்கள் நிறைந்த வாழ்வுதான் அவர் கண்ட சுகம்.

"நான் வீண்வாழ்க்கைநடாத்தவில்லை" என்ற இவ்வளவு சொற்களையும் தனது கல்லறையில் (சமாதியில்) பொறிக்க வேண்டும் என்பது அவரின் கடைசிவேண்டுகோள். ஆனல், அவர் இறந்து இருபது வருஷங்கள்வரை இது நிறைவேறவில்லை. இவ்வளவுதான் தன்னலமற்ற தியாகிகளுக்கு மனிதகுலம் தரும் மதிப்பும் மரியாதையும்.

வேதனையையும் துன்பத்தையும் நீக்குதல்மிக உயர்ந்த இலட்சியம். கலைகளில் உயர்ந்தது நோய்நீக்கும் கலை. இந்தக்கலையைக் கண்டுபிடித்தவர் டாக்டர் ஹனிமன் தன் பிறவியின் நோக்கத்தை வாழ்நாளில் நிறைவேற்றினர். அவர் தமது வாழக்கையை வீணுக்கவில்லை.

## பரந்தன் ரசாயன தொழிலாளர் கூட்டம்

பரந்தன், திங்கள்

பரந்தன் ரசாயன தொழிற்சாலையின் ஐக்கிய ரசாயன தொழிலாளர் யூனியன் பொதுகூட்டம கடந்த வெள்ளிக்கிழமை யூனியன் தலைவர் திரு. என். ராமநாதன் தலைமையின் கீழ் நடைபெற்றது.

தலைவர் தனது முன்னுரையில் தொழிற்சாலை தற்போது இருக்கும் நிலைமையயும் தொழிலாளர் உரிமைகள் பற்றியும் எடுத்துக்கூறி, தொழிலாளர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றும குறிப்பிட்டார்.

அடுத்து உற்பத்தி அதிபர் திரு. எம். பாலசுந்தரம் பேசுகையில், தொழிற்சாலை பற்றி அரசாங்கம் மூன்று தீர்மானங்கள் வைத்திருப்பதாகவும் அவைகள் (1) கொழும்புக்கு இடம்மாற்றுவது. (2) மூடிவிடுவது. (3) தொடர்ந்து நடத்துவது. கொழும்புக்கு மாற்றினல் வருடமொன்றுக்கு 68,000 ரூபா மிச்சமாகுமென்றும் கூறினர். அடுத்து இத் தொழிற்சாலையை பரந்தனில் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கத்திடம் நாம் கேட்ட 20 லட்சம் ரூபா கிடைக்குமேயானல் லாபத்தில் இயக்க முடியும் என்று கூறினர்.

வி. ஆனந்தசங்கரி, சிதம்பரநாதன், டி. சுகுமாரன், ஏ. பொன்னையா, கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் பேசியபின் காரியதரிசி திரு. கே யோகராசாவின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## கருவாடு பற்றி எம். பி.

கடுகண்ணவை, திங்கள்

உடுநுவர எம். பி. திரு. டி. பி. ஜயசுந்தரா, டெனுவற கூட்டுறவுச்சங்கத்தின்பொதுக் கூட்டத்தில் தீர்மானமொன்றை ஆதரித்து பேசுகையில், கூட்டுறவுக் கடைகள் மூலமாகக் கருவாட்டை விநியோகிக்காமல், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் மூலமாக வீட்டுக்கு வீடு கருவாடு விநியோகிக்கும் முறை சரியானதல்ல என்றும், இந்த ஏற்பாடு கள்ள மார்க்கெட் வியாபாரிகளுக்கு சாதகமாகவே தான் முடியுமென்றும் இந்த நாட்டில் கருவாடு விநியோகம் நடைபெறும் முறை திருப்தியானதல்ல என்றும் கூறினர்.

# உலகப்புகழ்வாய்ந்த

## வைத்தியத்துறை ஆராய்ச்சிக்கழகம்

மேற்கு ஜெர்மனியிலுள்ள எஸ்ஸன் நகரம் அதன் நிலக்கரி சுரங்கங்களுக்காக மட்டுமின்றி அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சர்வதேச வைத்தியத் துறைப் பயிற்சிக் கழகத்திற்காகவும் உலகின் கவனத்தை எல்லாம் கவரவிருக்கின்றது. இந்நகரிலுள்ள மாபெரும் ஆஸ்பத்திரிகளை எல்லாம் இணைத்து பல்கலை "கிளினிக்" ஒன்று ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு ஏற்படும் வைத்தியத் துறைப் பயிற்சி கழகத்தில் சகல வியாதிகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்த வசதிகள் இருக்கும். "ரேடியோலாஜிகல்" ஆராய்ச்சிக்கான திறமை வாய்ந்த ஆராய்ச்சி நிலையம் இது என்ற புகழ் சீக்கிரமே ஏற்படவிருக்கிறது. இளம் பிள்ளை வாத நோய்க்கு சிறந்த முறையில் சிகிச்சை இங்கு அளிக்கப்படும். கதிரியக்க ஆபத்திற்கான சிகிச்சை அளிக்கும் சிறந்த நிலையமாக மேற்கு ஜெர்மனியிலேயே இது முதன்மை பெற்று விளங்கும். புற்று நோய்க்கான ஆராய்ச்சிகளுக்கும் இது சிறந்த ஸ்தாபனமாக விளங்கும்.

இக்கழக கட்டிடத்திற்கான அமைப்பை உருவாக்கியவர் பிரபல கட்டிடக் கலை நிபுணரான மாக்கன் என்ற பெர்லின் வாசி. இதைக்கட்ட 40 லட்சம் டாலர்கள் செலவிடப்படும். இளம் பிள்ளை வாத ஆராய்ச்சி நிலயத்திற்காக மட்டும் 14 லட்சம் டாலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிருமிகள், அம்மைப்பால்தயாரிப்பு இவைகள் சம்பந்தமான ஆராய்ச்சிக்காக தனிப் பிரிவு ஏற்படுத்தப்படவிருக்கிறது. 40 லட்சம் டாலர் செலவில் கண் வைத்திய சாலையொன்றும் அமைக்கப்படும்.

இந்த வைத்தியத்துறை ஆராய்ச்சி நிலயங்கள் அமைக்கப்பட்டு வருவதை இதர நாடுகள் மிக உன்னிப்பாகக் கவனித்துவருகின்றன. அந்நாடுகளிலிருந்து இக்கழகத்தில் பயிற்சி பெறவும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடவும் வைத்தியத்துறை மாணவர்களிடமிருந்து மனுக்கள் இப்போதே வர ஆரம்பித்துவிட்டன. ஆசிய நாடுகளிலிருந்து வந்துள்ள மனுக்கள் அதிகமாக இருப்பதிலிருந்து இந்நிலயத்தில் சேர ஆசிய மாணவர்களுக்கு உள்ள ஊக்கம் நன்கு புலனகிறது இதில் சேவை செய்யவிருக்கும் பேராசிரியர்கள் ஜெர்மனிக்கு வெளியிலும் புகழ் பெற்றவர்கள். சஸ்திர சிகிச்சை கலையில் மிகவும் வல்லவர்கள். இத்துறையில் உலகப் புகழ் பெற்றவர்கள்.

இக்கழகத்தின் சாதனைகள் வருகிற ஐந்து வருஷங்களில் மிக மிகப் பிரமாதமாக அமையவிருக்கின்றன.

எஸ்ஸனில் யுத்தத்தின் போது எல்லா ஆஸ்பத்திரிகளும் குண்டு வீச்சுக்கு இலக்காகி தரைமட்டமாகிவிட்டன. நாலரைக் கோடி ஜெர்மன் மார்க்குகள் செலவிட்டு இவைகள் புதிதாகக் கட்டப்பட்டன. புது ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அதில் ஏற்கெனவே செலவிட்ட அளவுக்கு ஈடான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. எஸ்ஸன் வைத்தியத்துறை ஆராய்ச்சி கழகம் சர்வசேத புகழ் வாய்ந்த ஸ்தாபனமாக விளங்கும் என்பதில் சந்தேகமேயில்லை. (யூ.பி.எஸ்.)

## மண்டையில் முட்டி விழுந்தது

### ஆஸ்பத்திரியில் சீவல் தொழிலாளி

காங்கேசன் துறை, திங்கள்

இப்பகுதியைச் சேர்ந்த ஓர் சீவல் தொழிலாளி வழமையைப் போல ஒரு பனைமரத்தில் ஏறுவதற்குரிய உபகரணங்களுடன் சென்ருர். பனைமரத்தில் ஏறுகையில் அவர் தலையில் பனைமரத்திலிருந்து முட்டியொன்று விழ்ந்தது. தலையில் காயம் ஏற்பட்டது. அவர் உடனடியாக ஆஸபத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

## டிகாலுக்கு பேராதரவு

பாரிஸ், ஏப். 9

பிரான்சில் நடைபெற்ற வாக்குக் கணிப்பில் 91 சதவிகிதத்துக்கு மேற்பட்ட மக்கள் அதிபர் டிகாலின் அல்ஜீரிய ஒப்பந்தத்தை ஆதரித்து வாக்களித்தனர். மொத்தம் 280 லட்சம் வாக்காளர்களில் 75 சத விகிதத்துக்கு வாக்களித்தனர். அல்ஜீரியாவில் நேற்றைய சம்பவத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர். 67 பேர் காயமடைந்தனர்.

## ஐயாறன் எழுதுவது

ஒரு சிங்கள நண்பர் தமது குடும்பத்துடன் யாழ்ப்பாணத்துக்குவந்திருந்தார். நாகதுவீப விகாரையில் வணங்கிவிட்டு, நாகபூஷணி அம்மன்கோவிலுக்குச் சென்று இரண்டுமணி நேரம் அங்கு விசேஷ பூசையில் கலந்துகொண்டதுடன், தமது மூத்த மகனுக்கு உடல் நலமானல், நேர்த்திக்கடன் செலுத்துவதாயும் வேண்டிக்கொண்டாராம்.

பின்னர் யாழ்ப்பாணம் நல்லூர் கோவிலுக்கு, சட்டைகளைக் கழற்றிவிட்டுச் சென்று தரிசித்து சந்தனம், குங்குமம் இவற்றை நெற்றியில் இட்டுக்கொண்டு பெருமையுடன் வந்தார். பார்த்தால் அசல் சைவர்போலவே இருந்தது.

ஃ ஃ ஃ

பல விஷயங்களைப் பற்றிப் பேசினேம். சதிவழக்கு முதல் மொழிப்பிரச்சினைவரை பலதும் கதைத்தோம். மொழிப்பிரச்சினைதீர ஒரு யோசனை கூறினர் அவர். தமிழர் கட்டாயமாகச் சிங்களம் படிக்க வேண்டுமென்றும், சிங்களவரும் கட்டாயமாகத் தமிழ் படிக்கவேண்டுமென்றும் அப்படிச்செய்தால் இந்த மொழிப் பிரச்சினை வெகு சுலபமாகத் தீர்ந்துவிடுமென்ருர். இருசமுகத்தினரும் இருமொழிகளும் கற்பதாயின் மொழிப்பிரச்சினையே இராது.

தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் சிங்களத்தை முன்னர் கற்பித்துவந்தனர். ஆனல் தனிச் சிங்களச்சட்டம் வந்த பின்னர் தங்கள் சுயமரியாதையைக்காத்துக்கொள்ள, சிங்கள போதனையை விட்டனர். சிங்களவருக்குக்கட்டாயமாகத் தமிழைப் போதிக்க அரசாங்கம் ஒழுங்கு செய்தால், தமிழைத் தேசிய மொழியாகவும் அரசாங்க மொழியாகவும் அங்கீகரித்தால் தமிழரும் உடன் சிங்களம் கற்க முற்படுவர்.

சிங்களம் படிக்காததால் தமிழருக்குத்தான் நஷ்டம். ஆனல் மற்ற எதையும் விட தன் மானமே பெரிதென மதிக்கும் தமிழர், சிங்களவர் கட்டாயமாக தமிழ்கற்க முன்வந்தால், தாங்களும் சிங்களத்தைக் கற்க முற்படுவர். இரு சமுகத்தவருக்கும். இரு மொழிகளும் தெரிந்துவிட்டால் சிக்கல் ஏது?

இப்படியெல்லாம் இருவரும் ஆங்கிலத்தில் கதைத்தோம். இங்கிலீஷ் மட்டும் தெரியாதிருந்தால், இருவரும் ஊமையும் செவிடர்களுமாக இருக்க வேண்டியது தான்.

ஒரு தமிழ்த் தாய்க்கு சிங்களமும் தெரியும். அவர் கொழும்பிலும், மலை நாட்டிலும் சில ஆண்டுகள் இருந்தவர். அவர் சிங்கள நண்பரின் மனைவியாருடன் சிங்களத்தில் அமைதியாகக் கதைத்துக்கொண்டிருந்தார்.

* * *

சதித் திட்டம் தோற்க யார் காரணம் என்று நண்பரைக் கேட்டேன். கதிர்காமக் கடவுள் தான் என்று சட்டென்று பதிலளித்தாரவர். பிரதமர் கதிர்காமக் கடவுளின் பக்தையாகையால், அக்கடவுளே அவரை அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றியதாகவும் கூறினர்.

* *

மூக்குவாய் செவி கண் உடல்
ஆசிவந்து
தாக்கும் ஐவர் தம்மாப்பை
அவிழ்த்தருள்
நோக்குவான் நமை நோய்
வினை வாராமே
காக்கு நாயகன் கச்சியே
கம்பனே.

—திருநாவுக்கரசர்.

புதுடில்லி, ஏப். 9

திரு. இ. வி. கே. சம்பத்தின் தமிழ் தேசியக் கட்சியும், திரு. அங்கோளிப்பிள்ளையின் தலைமையிலுள்ள கட்சியும் ஒன்ருக இணைந்தன.

# தானே இயங்கும் வர்ண கைகாட்டிகள்

## மருதானை, பம்பலப்பிட்டியில் நிறுவப்படுகின்றன

கொழும்பு, திங்கள்

தானே இயங்கும் வர்ணக் கைகாட்டித் திட்ட வேலைகளின் முதல் கட்டத்தைப் புகையிரதப் பகுதி செய்து முடித்துள்ளது.

மருதானை, பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களுக்கிடையில் இந்த வர்ணக் கைகாட்டிகள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்த வேலைத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் பம்பலப்பிட்டிக்கும் கல்கிசைக்குமிடையே தன்னுலே இயங்கும் வர்ணக் கைகாட்டிகளை நிறுவுவதாகும்.

இத்திட்ட வேலைகள் பூர்த்தியானதும் வியாங்கொடை வரை வர்ணக் கைகாட்டிகள் இயங்கிவரும். கடந்த சில இரவுகளில் வர்ணக் கைகாட்டிகள் உபயோகிக்கப்பட்டன.

இவை வேலையை இலகுவாக்கியிருப்பதோடு பாதுகாப்பான முறையாகவும் இருக்கின்றன. ரயில் சேவையில் தாமதம் ஏற்படுவதையும் இவை குறைத்துவிடும்.

---

# மொறட்டுவையில் கருவாடு பட்டபாடு

## கள்ள மார்க்கெட்காரர்கள் பலதடவை வாங்கினர்

மொறட்டுவ, திங்கள்

இங்கு கருவாடு விநியோகம் செய்ததில், மொறட்டுவாவிலுள்ள மக்களுக்கு பெரும் ஏமாற்றம் கிடைத்திருக்கிறது.

மொறட்டுவ நகரசபையில் முதல் நாள் கருவாடு விநியோகித்த பொழுது ஏராளமானோர் 'கியு' வரிசையில் நின்று கருவாட்டைப் பெற்றுக்கொண்டனர். ஆனல் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த நினைத்த கள்ள மார்க்கெட் வியாபாரிகள் மீண்டும், மீண்டும் 'கியு' வரிசையில் நின்று ஏராளமான கருவாட்டைப் பெற்றுக்கொண்டனர்.

அடுத்த நாள் பொலிஸ் நிலைய வளவில் கருவாடு விநியோகம் நடைபெற்றபொழுது பல மணித்தியாலக் கணக்கில் காத்து நின்ற மொறட்டுவ வாசிகள் அதிருப்தி கொண்டு பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

## 1 றுத்தல் உப்பு 30 சதம்

தெரணியகலை, திங்கள்

இருபது சதமாக விற்பனை செய்த வியாபாரிகள், இப்பொழுது ஒரு றுத்தல் உப்பை 30 சதத்திற்கு விற்பனை செய்கின்றனர். தனிப்பட்ட வியாபாரிகள் ஒரு றுத்தல் கருவாட்டை ரூ. 2விருந்து ரூ. 2-50 வரை விற்பனை செய்கின்றனர். இவற்றுடன் மற்றைய உணவுப் பொருட்களினதும் விலைகள் இங்கு அதிகரித்த போதிலும் இது சம்பந்தமாக உணவு, விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

---

# பள்ளிக்கூட அதிபருக்கு தேசீய சேவை

## கல்வி இலாகா திட்டம்

கொழும்பு, திங்கள்

பள்ளிக்கூட அதிபர்களுக்கான தேசிய சேவை இயக்கம் ஒன்றைக் கல்வி இலாகா உருவாக்கியுள்ளது.

ஏப்ரல் 19-ம் திகதி தொடக்கம் 22-ம் திகதி வரை இந்த சேவை இயக்கம் தொழிற்படும்.

சமுகசேவை இயக்கங்கள் பற்றி அறிந்து கொள்வதற்குப் பள்ளிக்கூட அதிபர்களும் ஒருவித சேவையில் கலந்துகொள்வது நல்லது எனக் கடைசியாக நடைபெற்ற பள்ளிக்கூட அதிபர்கள் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பேரில் மேற்படி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கெனத் தேசிய சேவை முயற்சிகள் பலவற்றை இலாகா ஒழுங்கு செய்துள்ளது.

---

# 'அனுபவமற்ற எம். பி.க்கள் வாக்குறுதி அளிப்பார்கள்

— ஆர். ஜி. சேனநாயகா

மீரிகாமம், திங்கள்

"அனுபவமற்ற எம். பி.க்கள் தான் எதற்கும் வாக்குறுதியளிப்பார்கள். ஆனல் அனுபவமுள்ள எம். பி.க்கள் ஒருபோதும் வாக்குறுதியளிக்கமாட்டார்கள். எதையும் தாங்கள் முயற்சி பண்ணுவதாகக் கூறுவார்கள்".

பறனகம மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "தங்களது தொகுதியிலுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனுபவமுள்ள எம். பி.க்கள் எவரும் வாக்குறுதியளிக்க மாட்டார்கள். கூடிய வரையில் தாங்கள் முயற்சி பண்ணுவதாகவே அவர்கள் கூறுவார்கள் பறனகம மகா வித்தியாலயத்தின் தேவைகளை நான் பூர்த்திசெய்யாதது குறித்துமனம்வருந்துகின்றேன் அரசாங்கத்திடம் நிதி இல்லாததே இதற்குக் காரணம்".

---

## துப்பாக்கிச் சூட்டிக்கு மாண்டாள் மங்கை

குருநாக்கல், திங்கள்

பிலஸ்ஸ, டால்சி மவுண்ட் தோட்டத்திலுள்ள ஒரு வீட்டில், 25 வயதுள்ள விஜயக்கூன் என்ற மங்கை, துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகிக் கிடந்தார். இதுசம்பந்தமாக ஏ. கான் என்ற இளைஞனைப் பொலிசார் றிமாண்டில் வைத்துள்ளனர்.

இறந்தவரின் மரணம் குறித்து நடைபெற்ற விசாரணையின்போது, இறந்தவர் கானின் 'ஆசை நாயகி' என்றும், தோட்டத்தில் வசிக்கும் கானை, அவர் சந்திக்கச் சென்ருர் என்றும் அங்கு துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாக நம்பப்படுகிறதென்றும் தெரியவந்தது.

ஸ்தலத்தில் விசாரணை நடத்திய குருநாக்கல் மாஜிஸ்டிரேட் திரு. ஈ. எவ். டி' சில்வா மேல் விசாரணையைஒத்திவைத்தார்.

---

## மீண்டும் கட்சிக் கொடிகள்

காங்கேசன்துறை, திங்கள்

கடந்த ஒரு வருடகாலமாக இருந்துவந்த அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிமீதான தடைநீக்கப்பட்டதனைத் தொடர்ந்து இப்பகுதியில் பல வீடுகள் முன்பாக தமிழரசுக் கட்சிக் கொடிகள் நேற்றுப் பறக்க விடப்பட்டன. மேற்படி கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் பலர் கொடிகளைப் பறக்க விடும் பணியினைமேற்கொண்டிருக்கின்றனர்.

---

## சனசமூக சங்க தேர்தல்

வேலணை, திங்கள்

நெடுந்தீவு சமூக முன்னேற்ற சங்கக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின் வருவோர் புதுவருட நிர்வாகிகளாக; தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.எஸ். மரியாம்பிள் உபதலைவர்: திரு. ச. அருளப்பு செயலாளர்: திரு.டி. சண்முகரெத்தினம். தனாதிகாரி: திரு. ச. க. வக்கீன். உபதனாதிகாரி: திரு. சி. கணபதிப்பிள்ளை.

---

## பஸ் விபத்து

### நால்வருக்கு மோசமான நிலை

கம்பளை, திங்கள்

ஹற்றனிலிருந்து கம்பளையை நோக்கி வந்துகொண்டிருந்த இ.போ.ச. பஸ் ஒன்று கம்பளை மரியவத்தை என்ற இடத்தில்விதிவிட்டுவிலகிவிபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் 15 பிரயாணிகள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலைமை மோசமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. காயமடைந்தோர் கம்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

---

## லண்டனில் ஐ. நா. கமிட்டி

லண்டன், ஏப். 9

தென் ரொடிஷியாவின் வருங்காலம்பற்றிப் பேசுமுகமாக இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு. ஸி. எஸ். ஜா தலைமையில் ஐ. நா. கமிட்டி ஒன்று லண்டன் வந்து சேர்ந்தது.

---

## 6 நாள் தத்தளித்த படகில் மூவர் பலி

புதுடில்லி, ஏப். 9

இந்துசமுத்திரத்தில் 14 இந்தியர்கள் அடங்கிய ஒரு படகு 6 நாள் தத்தளித்தபின் நேற்று மீட்கப்பட்டது. 11 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். மூவர் களைப்பினல் உயிரிழந்தனர்.

---

# இந்தியாவின் புதிய மந்திரிசபைவிபரம்

## திரு. சுப்பிரமண்யத்துக்கு கனரக தொழில் இலாகா

புதுடில்லி, ஏப். 9

**இந்திய மத்திய அரசாங்கத்தின் புதிய மந்திரி சபை இன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நாளை காலை பதவி ஏற்கும் இந்த மந்திரி சபையில் 17பேர் இருக்கின்றனர்.**

திரு. கே. மாளவியா, திரு. பி. கோபால் ரெட்டி, திரு.ஸி. சுப்பிரமண்யம், டாக்டர் கே. ஸ்ரீமாலி, டாக்டர் ஹூமாயூன் கபிர், திரு. சத்தியநாராயண் சின்ஹா, திரு. ஜகஜீவன்ராம் சர்தார் சுவர்ண்சிங், திரு மொரார்ஜி தேசாய், திரு. குல்ஸாரிலால் நந்தா, திரு. லால் பகதூர் சாஸ்திரி, திரு. கே. ஸி. ரெட்டி, திரு. வி. கே. கிருஷ்ணமேனன், திரு. எஸ். கே. பட்டீல், திரு. ஹபீஸ்முகம்மது இப்ராகிம், திரு. ஏ.கே சென் ஆகியோர் புதிரகபினட் மந்திரிகள். இவர்களில் 8 பேர் முன்னைய மந்திரிகளாகும்.

டாக்டர் சுசீலா நய்யார், திரு. உமா சங்கன்ன, திரு. மனுபாய்ஷா, திரு. நித்தியானந்தகனுங்கோ, திரு. ராஜ் பகதூர், திரு. எஸ். கே. டே ஆகியோரும் மந்திரிகளின் அந்தஸ்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. நேரு. பிரதமர் பதவியுடன், வெளிவிவகார இலாகா, அணுசக்தி இலாகா ஆகியவற்றுக்கும் தொடர்ந்து மந்திரியாய் இருப்பார்.

கனரகத் தொழில் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. ஸி. சுப்பிரமண்யம் 1952 முதல் தமிழ்நாட்டில், நிதி, கல்வி, சட்டம் ஆகிய இலாகாக்களின் மந்திரியாகப் பதவி வகித்துவந்தார். திரு. சுப்பிரமண்யம் அரசியல் நிர்ணய சபையிலும், இடைக்கால பார்லிமெண்டிலும் அங்கம் வகித்தார். 52வயதான திரு. சுப்பிரமண்யம் கோயமுத்தூரைச் சேர்ந்தவர்.

டாக்டர் சுசீலா ரய்யார் மகாத்மா காந்தி, கஸ்தூரிபாய் காந்தி ஆகியோருடன் சிறைவாசம் அனுபவித்தவர். பின் காந்திஜிக்கு குடும்பவைத்தியராய் இருந்தவர். டில்லி சட்டசபையில் சபாநாயகராகவும், 1957 முதல் லோகசபை பிரதிநிதியாகவும் இருந்தவர்.

ராஷ்டிரபதி பவானிலிருந்து இன்று காலை வெளியான அறிக்கை இந்த விபரங்களைத் தெரிவித்துள்ளது. துணைமந்திரிகள் நியமனம் பின்பு அறிவிக்கப்படும்.

---

# வடக்கு, கிழக்கில் ராணுவத்தினர் நடத்தை

## விசாரணைக் கமிஷன் நியமிக்க கோருவர்

கொழும்பு, திங்கள்

அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ராணுவபடையினர் நடந்துகொண்ட விதம் பற்றி விசாரணை நடாத்துவதற்கு ஒரு கமிஷனை நியமிக்கும்படி வடமாகாணத்தைச் சேர்ந்த 3எம்பி.க்கள் கோரியுள்ளனர்.

விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்கும்படி அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளும் பிரேரணை பற்றி இந்த எம். பி. க்கள் அறிவித்தல் கொடுத்துள்ளனர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கிளிநொச்சி எம். பி. திரு. ஏ சிவசுந்தரம் ஆகிய மூவருமே மேற்படி பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

இப் பிரேரணை ஏப்ரல் 18ந் திகதியன்று பார்லிமெண்டில் விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படும்.

---

## ஆஸ்பத்திரியில் மாவட்ட அதிகாரி இல்லை

கொழும்பு, திங்கள்

கடந்த ஒன்பது மாதமாக அலுத்துவரை ஆஸ்பத்திரி மாவட்ட வைத்திய அதிகாரியின்றி இயங்கி வருகிறது. மூன்று வருஷங்களாக இந்த ஆஸ்பத்திரியில் தண்ணீர் 'பம்புகள்' பழுதுபட்டுக் கிடக்கின்றன. இந்தத் தகவல்களை பிந்தனை டி. ஆர். ஓ. திரு. கே. பி. எக்கநாயக்கா பதுளை கச்சேரியில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில் தெரிவித்தார். பதுளை அரசாங்க அதிபர் திரு. நிசங்கா [illegible] கூட்டத்துக்குத் [illegible] தாங்கினர்.

ஆஸ்பத்திரி [illegible]

---

## அரியாலையில் சுதேசிய திருநாள்

யாழ்ப்பாணம், திங்கள்

சித்திரை வருடப் பிறப்பு தோறும் சுதேசிய திருநாள் கொண்டாடும் அரியாலை மக்கள் இவ்வருடம் தமது 43வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவைநடாத்த விருக்கிருர்கள். அரியாலை அரசினர் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை மண்டபத்தில் கொண்டாடப் படவிருக்கும் இந்த விழாவில் ராஜராஜ சோழன் நாடகமும் நடித்துக் காண்பிக்கப்படும் எனத் தெரிகிறது. வழக்கம் போல விளையாட்டுப் போட்டி, நாடகப் போட்டி, பேச்சுப் போட்டி, சங்கீதப் போட்டி, திருக்குறள் போட்டி ஆகியவை நடாத்தப்பட்டு விழாவுக்குத் துரித ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. திரு. சத்தியலிங்கத்தின் சொற்பொழிவும் விழாவில் இடம்பெறும் எனத் தெரிகிறது.

---

## இளம் வாலிபர் கழகம்

கொழும்பு, திங்கள்

தொழில் இலாகாத் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் திரு. லிங்கன் அபேயவீராவைத் தலைமையாகக்கொண்டு இளம் வாலிபர் கழகம் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். தலைமைக் காரியாலய உத்தியோகஸ்தர்கள் இந்த இளம் விவசாயிகள் கழகத்தின் அங்கத்தவர்களாவர்.

---

[illegible]காதாரசேவை டைரக்ட[illegible] [illegible]கஜப் பிரஸ்தாபிப்பதென [illegible]ரு. நிசங்கா கூறினர்.



# மாணவர் மலர்



## நண்பனின் கடிதம்: 3

ராஜாவுக்கு,

வணக்கம். நீ அன்புடன் அனுப்பிய கடிதம் கிடைக்கப் பெற்றேன். பெறற்கரிய நண்பனைப் பெற்றுவிட்டேனென்று உளம் களிகூருகின்றேன். நண்பனே! பொன்மொழிகள் போன்ற உன் கருத்துக்கள் என்மனதிடையே இருந்த அறியாமை இருளைப் போக்கிவிட்டன. "பணம்படைத்த மக்களுடன்ஏழையாகிய நானெங்கே", எனக் குமுறிய என் மனதிற்கு சாந்தியை அளித்துவிட்டாய். ஏழ்மை, ஒருவனின் வாழ்வு முன்னேற்றத்தைத் தடை செய்யமுடியாது என்று நீ கூறும் கருத்தை என்னால் மறுக்கமுடியுமா? வறுமை கொடியதாக அறிஞர்களால் கூறப்பட்டபோதும், நாம் சுழலுஞ் சக்கரம்போல்வரும் வறுமையையும், செல்வத்தையும் ஒன்ருகவே அனுபவிக்கவேண்டும். வறுமையில் வாடியும் கலங்காது உயரியலட்சியத்தை நிறைவேற்றிய ●டாலின், என்மனதிலே நிறைந்து●விட்டார். இடையரு முயற்சி அவருக்கு வெற்றியளித்தது. முயற்சியும், அறிவும், பொறுமையுமுடையவனுக இருந்துவிட்டால் நாம்கொண்ட லட்சியம் நிறைவேறும் என்று நீ கூறுகிருய், அப்படித்தானே?

ராஜு! வாலிப உள்ளங்கள்தான் சமூக முன்னேற்றத்தின் விதைகளை உருவாக்கும் களங்கள்! சமுதாய ஊழல்களை-மனிதனின் பெருமையை அழிக்கும் களையைக் களைந்தெறிய வேண்டும். சரி, ஏதோ விரிவாகக் கூறுவதாகக் கூறினுய். ஒருவேளை அவை உன் லட்சியக் கனவுகளாகவுமிருக்கக் கூடும். உனது அந்தக் கருத்துக்களஞ்சியங்களைப் பெற்று மகிழ்ந்துகொள்ளும்நாளை எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.

அன்புள்ள நண்பன்
பாலா

(எழுதியனுப்பியவர்—
எஸ்.பத்மா)

விஞ்ஞானம்:9

## கரியிலிருந்து வைரம்

— மகான் —

"விஞ்ஞானம்" என்ற தொடரில் இவ்வாரம் புதியதொரு அத்தியாயத்திற்கு வந்துள்ளோம் இதுவரை தாவரங்களையும், விலங்கினத்தையும் மற்றும் ஒலி, ஒளி பற்றியும் அறிந்துகொண்டோம் இம்முறை வைரக்கல், முத்து ஆகிய விலைமதிக்கமுடியாத செல்வங்கள், எவ்வாறு கிடைக்கிறதென்பதைப்பற்றி அறிந்துகொள்வோம்

மாணிக்கம், மரகதம், கோமேதகம், நீலம், வைடூரியம், புஷ்பராகம், முத்து, பவளம் ஆகியவற்றுடன் வைரத்தையும் சேர்த்து நம்மவர்கள் நவரத்தினங்கள் என்று சொல்லுகிருர்கள். இவற்றுள் மிகச் சிறந்ததும், உறுதியானதும் வைரம்தான்! முத்தும் பவளமும் கடலில் வாழும் ஜந்துக்களிலிருந்து கிடைக்கின்றன. மற்ற ஏழு இரத்தினங்களும், விலை உயர்ந்த ஏழுவகைக கற்களேயாகும்.

முதலில் வைரத்தின் இரகசியத்தை அறிந்துகொள்வோம். வைரங்கள், விலை உயர்ந்த கற்கள் என்பது உங்களில் பலருக்கும் தெரியும். ஆடவரும், பெண்களும் வைர நகைகளை விரும்பி அணிகிருர்கள். வைரங்கள், சுரங்கங்களிலிருந்துதான் தோண்டி எடுக்கப்படுகின்றன என்பது நமக்குத் தெரிந்தவிஷயமாக இருந்தாலும், வைரங்கள் எப்படித்தோன்றின என்பது பலருக்குப் புரியாத புதிராகவேதான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை!

வைரம் என்ருல் என்ன? சுருங்கச் சொல்லப்போனால், அது சுத்தமானநிலக்கரி. இதை அறிந்ததும் நீங்கள் வியப்படைவீர்கள் என்பது உண்மையே. பழைய காலங்களில் அதாவது நமது பாட்டன், பூட்டன், பாட்டனின் பூட்டன், பூட்டனின் பூட்டன் தோன்ருத அக்காலத்தில் பெருங்காடுகளாயிருந்த இடங்களில் அடிக்கடி புயற்காற்றும், பெருவெள்ளமும், பூசம்பமும் ஏற்படுவது சகஜம். இதனுல்காடுகள் பூமிக்குள் புதைந்துபோய், காடுகளை மூடிய மண்மீது விதைகள் விழுந்து மீண்டும் காடுகள் தோன்றி, பின்னர் மறுபடியும் இக்காடுகள் மேற்கூறிய காரணங்களால் புதைந்துபோய் விடுகின்றன. இவ்விதமாக எத்தனையோ காடுகள் ஒன்றன்மேல் ஒன்ருக புதைந்து மண்மூடிப்போயின. மேலே குவிந்த மண்ணின் பாரத்தால் அழுத்தப்பட்டு உள்ளே புதைந்திருந்த மரம், செடி கொடிகள் முதலியவை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மண்ணுக்குள் கிடந்து மட்கிப்போய் கரியுருவமாக மாறிவிடுகின்றன. இக்கரியைத்தான் நிலக்கரி என்று சொல்லுகிருேம்.

என்ன...... நீங்கள் வைரங்களைப்பற்றிக் கூறப்போவதாகச் சொல்லிவிட்டு, நிலக்கரியைப்பற்றி ஏதேதோ கூறுகிறீர்கள் என்று எண்ணிவிடாதீர்கள். நிலக்கரி எவ்வாறு தோன்றுகிறது என்பதைத் தெரித்துகொண்டால், வைரங்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பது சுலபமாகத்தெரிந்துகொள்ளலாம். அது சரி... நிலக்கரி எவ்வாறு தோன்றியது என்பதை அறிந்துகொண்டோமல்லவா? இத்தகைய கரியே, இன்னும் பல்லாண்டுகள் பூமிக்குள் கிடந்து வைரக்கல்லாக விளைவதென்ருல், நீங்கள் நிச்சயம் ஆச்சரியம் அடைவீர்கள். இவ்விதம் தான்வைரமுண்டாகிறது என்றும், அது சுத்தமான கரிதான் என்றும் தற்கால இரசாயன சாஸ்திரிகள் சொல்லுகிருர்கள்.

உஷ்ணம், அதிகமாக ஏற ஏற வைரம், கற்பூரம் எரிவது போல் எரிந்துபோகுமென்று இத்தாலி தேசத்து அறிஞர்கள் முதன் முதலில் கண்டுபிடித்தார்கள். பிராணவாயுவோடு சேர்த்து உஷ்ணம் ஏற்றும்போது, வைரம் எரிந்து கார்பன் என்னும் வாயுவாகிறது என்று பிரான்ஸ் தேசத்து இரசாயன சாஸ்திரி ஒருவர் முதன்முதலில் மெய்ப்பித்துக் காட்டினர். பிறகு ஆங்கிலேய இரசாயன சாஸ்திரி ஒருவர் வைரம் கரியேயன்றி வேறில்லையென்று நிரூபித்துவிட்டார்!

வைரம் இந்தியா, பிரேஸில், தென்னுபிரிக்கா முதலான இடங்களில்கிடைக்கிறது. விலை உயர்ந்த பெரிய வைரங்கள் தென்னுபிரிக்காவிலுள்ள டிரான்சுவாலில் அகப்பட்டிருக்கின்றன. இவற்றுள் எக்ஸெல்ஸியர், குல்லீன் ஆகிய வைரங்கள் உலகப்பிரசித்தி பெற்றவை. வைரகங்ள் எவ்வாறு தோன்றியது? கரிதான்வைரம் என்பதை இப்போது அறிந்துகொண்டோம். இனிமேல் நீங்கள் வைர நகைகளைக் கண்டால், "பூ இது சுத்தக்கரி" என்று கூறிவிடுவீர்கள் என்பதில் ஐயமில்லை.

வைரக்கதை முடிந்துவிட்டது. இனி முத்தின்கதையைப் படிடபோம். கடலின் அடிநிலத்திலுள்ள கல் முதலியவற்றின் மீது ஒட்டிக்கொண்டிருக்கும் முத்துச்சிப்பிமீனிலிருந்து தான் முத்துக்கள் கிடைக்கின்றன. இம் மீன்களுக்கு மெதுவாக இடம்விட்டு இடம்நகரும் சக்தியும் உண்டு உள்ளிருக்கும்முத்துச்சிப்பி மீனுக்குக் கவசமாக இரண்டு கிளிஞ்சல்கள் இருக்கின்றன. இவை கடினமாக இருக்கும். வைரம் நிலக்கரியிலிருந்து உண்டாகியதுபோல், முத்து; பூச்சி,மீன்முட்டை அல்லது சிறுமணலில்இருந்துதான் உண்டாகிறது. முத்துச் சிப்பி மீனுக்குக் கவசமாகவுள்ள கிளிஞ்சல்களுக்கிடையேசிலசமயங்களில் ஏதும் பொருட்கள் புகுந்துவிட்டால், மீனுக்கு நோவை உண்டாக்கும். இதை நீக்கும்பொருட்டு, மீன் அசைந்து புரளத் தொடங்கிவிடும். அப்பொழுது அது, தனது உடம்பிலிருந்து ஒருவித வெண்மையான —பிசின்போன்ற— திரவத்தைச் சுரக்கும். இப்பசைநீர், முத்துச்சிப்பிமீனுககு மேலும் நோவைக் கொடுக்கும். இப்படியே, அந்த மீன் அப்பொருளைச்சுற்றி ஒன்றன்மேல் ஒன்ருகப் பல அடுக்குகளில் பசைநீரைச் சுரந்துகொண்டே இருக்கும். இப்பசைநீர், முடிவில் அப் பொருளைச் சூழ்ந்து மூடி, கண்ணடிபோன்ற பிரகாசமான ஒருவகை வஸ்துவாக உறைகின்றது. இந்த வஸ்துவையே நாம் முதது என்று சொல்லுகிருேம், முத்துச்சிப்பி மீன்சுரக்கும் பசை நீரின் அளவுக்கு இசைநதபடி, முத்து பெரிதாகவும், சிறிதாகவும் இருக்கும்.

நல்ல உயர்ந்த, விலைமதிப்புள்ள முத்துக்கள், நன்ருக உருட்சியடைந்து கரும்புள்ளி முதலியமறுவின்றிச் சுத்தமான பளிங்குபோல் நிழலாடிக் கொண்டிருக்கும். இவ்வித முத்துக்களை ஆணி முத்துக்கள் என்று சொல்வதுமுண்டு. முத்துக்கள் நமது நாட்டை அடுத்தகடலிலும், பாரசீகவளைகுடாவிலும் விசேஷமாக எடுக்கப்படுகின்றன. தூத்துக்குடிக்கு அருகே கிடைக்கும் முத்துக்கள் அழகிலும், பளபளப்பிலும், உருண்டை வடிவிலும் உலகப் பிரசித்தி பெற்றவையாம்!

இனிமேல் நீங்கள் வைரத்தையோ முத்தையோ கண்டால் உங்களுக்குள்ளேயே உண்மை விஷயததை அறிந்து, வியப்படைவீர்கள் என்பது சொல்லாமலே தெரிகிறது.

## கடல்

—பரணி—

ஒலிவென் றலை கடலே - உனக்கு
ஒய்வி லையோ கடலே
தாவிக் கரை மீதே - நீயும்
தவழ்வ துமேன் கடலே.

வட்ட நெடு வானம் - உனக்கு
வாய்த்தபெருங் குடையோ
இட்ட முடன் நீயும் - வீணே
இரைவ துமேன் கடலே.

ஓலிவென் றலறு கிருய் - கடலே
உற்றதெ னக்கு ரையாய்
சோர்வு நீகாணி டினும் - உளஞ்
சோர்ந் திடல்தா னழகோ.

துன்பப் பெரும் புயலும் - கடலே
துயரப் பெருவ ரியும்
இன்பத் தைமாய்த் தனவோ - கடலே
ஏனின் னுமலறு கிருய்.

வையப் புடைபு டைத்துக் - கடலே
நாளுநீ யலறு கிருய்
வையமு னக்க ளித்த - பெரு
வாழ்வின் பரிசி துவோ.

சோக முனக்கென்ருல் - கடலே
சுகமெ வர்க் கென்பாய்
சோகத் திற்சு கங்காணின் - பின்
சொர்க்க முமேன் கடலே.

## பாடசாலைகள் கலைவிழா

காத்தான்குடி, திங்கள்

மட்டக்களப்புத் தெற்கு வட்டாரப் பாடசாலைகளின் கலைவிழா முதல் நாள் நிகச்சிகள் ஆரையம்பதி, அரசினர் மகாவித்தியாலயத் திறந்த வெளியரங்கில் நடைபெற்றன.

விழாவுக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. எம். தம்பித்துரை தலைமை தாங்கினுர்.

சங்கீத பூஷணம் செல்வி நாகேஸ்வரி சபாபதியின் தமிழ் மொழி வாழ்த்துடன் ஆரம்பமான விழாவில் பாலர் பாட்டுகள் நாடகசங்கீதம், நாடகம், நாட்டுக்கூத்து, என்னும் நிகழ்சிகள் இடம் பெற்றன.

கல்லடிஉப்போடை, இ.கி ச பெண்கள் பாடசாலை பாலர் பாட்டு, மட்டக்களப்பு, சிவானந்த வித்தியாலய 'அசோகன்' நாடகம், நாவற்குடா அரசினர் பாடசாலை 'நாட்டுக்கூத்து' ஆரையம்பதி,இ. கி. மி. கலவன் பாடசாலை 'கவிஓசை' காத்தான்குடி, அரசினர் மத்திய மகாவித்தியாலய 'தேர்தல்தந்திரம்' என்ற நாடகம், நிகழ்ச்சிகள் ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றன.

## சந்தேகம் தீருங்கள்

'சந்தேகம் தீருங்கள்' பகுதி இனி, இரண்டுவாரங்களுக்கு ஒரு முறையே வெளியாகும். கேள்விகளைத் தெளிவாகத் தபாலட்டையில் எழுதி அனுப்பிவையுங்கள்.

## நண்பனின் கடிதம் .....

இந்தப்பகுதிக்குக் கருத்துநிறைந்தனவாயும், தொடர்ந்து மற்றவர்கள் பதில் எழுதக்கூடியதாயும் கடிதங்களை எழுதி அனுப்புவதே வரவேற்கத்தக்கது.


## வகுப்பில் ....

உங்கள் பள்ளிக்கூட வகுப்பறையில், ஆசிரியர்கள் இல்லாத சமயம் பல சுவைமிகுந்த சம்பவங்கள் நிகழ்வதுண்டு. அவற்றைச் சுருக்கமாக, ஹாஷ்யமாக எழுதியனுப்புங்கள்.

## கதை, கட்டுரை

மாணவர்களிடமிருந்து நல்ல கதை, கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. தாளின் ஒரு பக்கத்தில் எழுதி அனுப்புங்கள்.

மாணவர் மலர் த. பெ. 49
"ஈழநாடு" யாழ்ப்பாணம்.



இங்கு காணப்படுவது மிகப் பெரிய "டெலஸ்கோப்". இதன் பிரதான கண்ணடியின் அகலம் 200 அங்குலம். நிறை பதின்நாலரை தொன்களும்.



தனது உடலின் நிறையிலும் பார்க்க, இரண்டுமுறை உணவை, இரு மணி நேரத்தில் சாப்பிடும் தும்பி (தட்டாரப்பூச்சி) தான் இது. இப்பூச்சினல் மனி[illegible]



உலகிலேயே அதிக தானிய உணவு சாப்பிடுவோர் இப்படத்தில் காணப்படும் தென்ரொடேஷியர்கள்தான். மாவுச் சத்து உணவுகளை கொலம்பியர்கள் [illegible]

# 'பெரியோரிடம் பணிவுடன் நடந்துகொள்ளவேண்டும்'

## மாணவர்களுக்கு வித்தியாதிபதி அறிவுரை

கொடிகாமம், திங்கள்

"கலியுகத்துக் கேற்றதான தீயகுணங்களிற் கலந்துகொள்ளாமல் தாய் தந்தையர்களுக்கும் கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கும் வயதுமுதிர்ந்த பெரியோர்க்கும் பண்புடன் நடந்து கொண்டால்தான் மாணவர்களின் கல்வி, பயனுள்ளதாய் இருக்கும்"

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் வித்தியாசாலை மாணவர் மன்றக்கலை விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும் போது வடபிரதேச உதவி வித்தியாபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் மேற்கண்டவாறு கூறினர். "மாணவர்கள் வெறும் புத்தகபூச்சிகளாக வாழாமல் சமுக துக்கும்நாட்டுக்கும் சிறந்தத்தொண்டாற்ற முன்வரவேண்டும்என்றும் அவர் கூறினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசிய போது குறிப்பிட்டதாவது:-

"இப்போதைய கல்வித் திட்டம் மாணவனின் வசிப்பிடத்துக்கும் சூழலுக்கும் காலப்போக்கிற்கும் ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். பாடசாலை ஒரு கிராமத்தில் முக்கிய அம்சம் வகிக்கிறது. கிராமத்தின் வருங்கால சந்ததியின் வளர்ச்சிக்கு பாடசாலையின் உயர்ச்சி மிக இன்றியமையாதது"

வித்தியாதரிசி திரு வி. முத்துலிங்கம், அறிவு உயர அன்பு உயரும் அன்பு உயர வாழ்வு உயர்ச்சியடையும் என்றும், நல்லதைச் சிந்தித்து நல்லதைப் பேசி, நன்மை செய்து வாழவேண்டும் என்றும் கூறினர்.

மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் சங்கீத பூஷணம் திரு. டி. இராஜலிங்கத்தின் இன்னிசை விருந்தும் நடைபெற்றது.

---

### பூந்தோட்டத்தில் தேசிய சேவை

வவனியா, திங்கள்

பூந்தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் தேசிய சேவையில் ஈடுபட்டனர்.

இவர்கள் தலைமையாசிரியர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளை தலைமையில் பாடசாலை வளவு விளையாட்டு மைதானத்தை துப்பரவு செய்தல், பாடசாலை முன்றிலில் பூந்தோட்டம் அமைத்தல், தோட்டத்தில் களை பிடுங்குதல் என்பனவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

---

### சுற்றுப் போட்டி

பருத்தித்துறை, திங்கள்

புத்தாண்டு விழாக் கைப்பந்தாட்டச்சுற்றுபோட்டியில் "ஏ" தொகுதிச் சாம்பியனுக பருத்தித்துறை கோல்டன் பிளாஸ் கோஷ்டியும் "பி" பிரிவுச்சாம்பியனுக கரவெட்டி விக்னேஸ்வராக் கோஷ்டியும் வெற்றி பெற்றுள்ளன.

இவ்விரு கோஷ்டிகளும் புது வருடத்தன்று புத்தாண்டு வெற்றிக் கேடயத்தை சுவீகரிப்பதற்கான போட்டியில் கலந்துகொள்ளும்.

---

### பாவிக்கப்பட்ட முத்திரைகளினல் கஷ்டம்

கொழும்பு, திங்கள்

பாவிக்கப்பட்ட முத்திரைகள் மீண்டும் தபாலுறைகளில் ஒட்டப்படுவதைத் தடை செய்வது தபால் இலாகாவுக்குப் பெரிய பிரச்சினையாக வந்துள்ளது. இது சம்பந்தமாக தபால் இலாகா அதிகாரிகள் தெரிவிக்கையில், அதிகமாக கிராமமக்கள் தான் இப்படியான பிழைகளைச் செய்கிறார்கள் என்று கூறினர்.

---

### ஸ்ரீ ராம நவமி

கொழும்பு, திங்கள்

வருகிற 13-ம் தேதி முதல் 15-ம் தேதிவரை கொழும்பு ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் ஸ்ரீ ராம நவமி கொண்டாடப்படும்.

---

### தற்கொலை

மாகோ, திங்கள்

பளுகடவெல என்ற இடத்தைச் சேர்ந்த எம். சுத்தஹாமி (வயது 80) என்பவர் ரயில் பாதையில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்.

இறந்தவரின் மரணவிசாரணையின்போது அவரின் மகன் தமது தந்தை கடந்த பல வருடங்களாக காசநோயினல் பீடிக்கப்பட்டு வந்தார் என்றும் சில சமயங்களில், தம் உயிரை விடுவதாக கூறினர் என்றும் தெரிவித்தார்

தற்கொலை என்த் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

### வானெலி நிகழ்ச்சிகள்

#### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

செவ்வாய் 10-4-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 குரல்வகை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம். 9-45 எம். கே. பரமசிவம்—நாகஸ்வரம்.

#### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கோவிலடி கே. ரங்கராஜன்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 கோவிலடி கே. ரங்கராஜன்-பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்). 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 மலரும் வாழ்க்கை-பேச்சு, 7-45 தஞ்சாவூர் கே. பி. சிவானந்தம், சி. ஆர். சாரதா—இரு வீணைகள், 9-15 'நல்ல கதம்பம்'—நாடகம், 9-30 மெல்லிசை, 9-50 ஆச்சொல கேளீர்.

---

### இவ்வருடம் கென்யா சுதந்திரம்

#### கென்யாட்டா நம்பிக்கை

நைரோபி, ஏப். 8

கென்யா ஆபிரிக்க தேசிய யூனியன் தலைவர் திரு. ஜோமோ கென்யாட்டா லண்டன் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு தாய்நாடு திரும்புகிறார். கென்யா அரசியல் திட்டப் பேச்சுவார்த்தைகளில் தாம் மகிழ்ச்சியடைந்துள்ளதாக திரு. கென்யாட்டா கூறினர். இந்த வருடத்துக்குள் கென்யா சுதந்திரமடைந்துவிடுமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

---

### நானவதியின கருணை மனு

பம்பாய், ஏப். 6

பம்பாய் வர்த்தகர் பிரேம் அஹ்ஜாவைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டின்மீது ஆயுட்காலச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் இந்தியக் கடற்படையின் முன்னள் கமாண்டர் நானவதியின் சார்பில நான்கு கருணை மனுக்கள் மகாராஷ்டிர கவர்னர் ஸ்ரீபிரகாசாவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நானவதியின் 10 வயது மகன் பெரோஸ், மனைவி திருமதி சில்வியா நானவதி, நானவதியின் வயது முதிர்ந்த பெற்றோர்கள் ஆகியோர் மூன்று கருணை மனுக்களையும் நானவதி ஒரு மனுவையும் அனுப்பி வைத்துள்ளனர்.

---

### கேரள கூட்டு அரசாங்கம்

சென்னை, எப். 7

"கேரள கூட்டு அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருக்கும், பதவியிலிருக்கத்தான் வேண்டும்" என்று கேரளமுதன் மந்திரி திரு பட்டம்தாணுப் பிள்ளை கூறினர்.





நீரில் கலந்தாலும்...
டீயுடன் சேர்த்தாலும்...
கோப்பியுடன் பருகினுலும்!

விலை மலிவானலும் ஸல் வெறும் சாதாரண மோல்டட் பால அல்ல. ஆமாம்!

ஸல் பிரத்தியேகமான போஷாக்குச் சத்தும் பாலாடையின் சுவையும் கொண்டது—அது மிகவும் இனிப்பானது, மற்றும் ஒரு நொடியில் கரைந்துவிடுகிறது. உங்கள் டீயுடனே, கோப்பியுடனே பாலுக்குப் பதில் ஸல்லை சேர்த்துக்கொண்டு பருகுங்கள். அதன் பாலாடையின் நறுசுவையுடன் கூடிய இனிப்புக்கு மேல் தனியாகச் சீனி சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றே சொல்லலாம்! ஸல்லை வெறும் நீரில் கரைத்தால் பால் பானமாகிறது—அப்பொழுது அதன் நற்சுவையின் பூரண தன்மையை நன்குக உணர்வீர்கள்! ஸல்லினுடைய தெவிட்டாத சுவையை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள் என்பது திண்ணம்.

ஸல் உடன் கரையும் மோல்டட் பால்

குடும்பத்தார் உடன் விரும்புவது

# "டப்பா" பாட்டு படிப்படியாக ஒழிக்கப்படும்

## வர்த்தக ஒலிபரப்பு முடிவு

கொழும்பு, திங்கள்

'டப்பா' சங்கீதத்துக்குப் பதில் கலைச்சார்பான சங்கீதத்தையே அதிகமாக ஒலிபரப்புவதென இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்புப் பகுதி புதிய தீர்மானஞ் செய்துள்ளது.

இலங்கை வானொலி வர்த்தக ஒலிப்பரப்பில் கல்வி கலாச்சார வளர்ச்சிக்குப் பயனளிக்க வல்ல கலைச் சார்பான சங்கீதம் வெகு சொற்பமாகவே ஒலிபரப்பப்படுவதாகவும் டப்பா சங்கீதம் அதிகமாகஒலிபரப்பப் படுவதில் ஒருவித நன்மையுமில்லை எனவும் இலங்கை வானொலி அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். டப்பா சங்கீதம் ஒரேயடியாக நிறுத்தி வைக்கப்படாதென்றும், ஆனல் படிப்படியாகக் குறைக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

---

### இனம் தெரியாத பிரேதம்

பலப்பிட்டியா, திங்கள்

கல்கந்த தனயம்பொல என்ற இடத்திலுள்ள இடுகாட்டில் இனம் தெரியாத ஒருவர் பலத்த காயங்களுடன் மரணத்தறுவாயில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டு பலப்பிட்டியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில நிமிட நேரத்தில் மரணமானார். இறந்தவர் தங்கப்பல் கட்டியிருந்தார். அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை.

### ஆடிட்டர் ஜெனரல் ஓய்வு பெறுவார்

கொழும்பு, திங்கள்

59 வயதான ஆடிட்டர்ஜெனறல் திரு. எல். ஏ. வீரசிங்க இவ்வாண்டுக்கடைசியில் ஓய்வு பெறுவதற்கான பத்திரங்களை அனுப்ப உத்தேசித்துள்ளார். சிங்களத்தில் நன்கு தகுதி பெற்ற ஒருவரை ஆடிட்டர் ஜெனரலாக நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. திரு. வீரசேகரா ஓய்வுபெறும் பெருட்டு லீவில் செல்லும்வரை தற்காலீக உதவி ஆடிட்டர்ஜெனறல் என்ற அத்தஸ்தை அவர் வகித்துவருவார். இப்போது உதவி. ஆடிட்டர்ஜெனறலாக இருக்கும் திரு. டி.எம்.டி. சில்வாவும் 1963-ம் ஆண்டு ஓய்வு பெறுவார்.

---

### வீடு தீக்கிரையானது

அக்குரெஸா, திங்கள்

தலஹகமவைச் சேர்ந்த யஜாகே பொடிசிங்கோ என்பவரின் வீடு முழுவதும் தீக்கிரையாயிற்று வீடு தீப்பற்றிய சமயம் பொடிசிங்கோ குடும்பத்தினர் வெளியே சென்றிருந்தனர். சுமார் 700 ரூபாய்க்கு அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# பல்லாயிரக் கணக்கான ரூபாய் பெறுமதியான மாவு, அரிசி

## நுவரேலியா கிட்டங்கியில் மாயமாய் மறைந்தன!

நுவரேலியா, திங்கள்

நுவரேலியா கிட்டங்கியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய்க்குமேல் பெறுமதியான மாவு குறைவடைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நுவரேலியா பொலிசாரும் உணவுக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதே கிட்டங்கியில் பல்லாயிரம் ரூபாய் பெறுமதியான அரிசியும் மாயமாய் மறைந்து விட்டதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக இரகசியப் பொலிசார் விசாரணை நடத்துவார்களெனத் தெரியவருகிறது.

### திருக்கேதீச்சரம் 7- ம் திருவிழா

திருக்கேதீச்சரம், செவ்வாய்

திருக்கேதீச்சரத்தில் இன்று 7-ம் திருவிழா நடைபெறுகின்றது. யாழ்ப்பாணம் வைத்தீசுவரவித்தியாலயம் திருவிழாவைப் பொறுப்பேற்று நடத்துகின்றது. நாளை நடைபெறும் எட்டாவது திருவிழாவை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பொறுப்பேற்று நடத்தும்.

---

### தாய்லாந்து மதகுரு

ஷில்லாங், ஏப். 9

தாய்லாந்து தலைமை மதகுரு, அஸ்ஸாம் முதன் மந்திரியைச் சந்திக்கவிருக்கிறார். இப்போது அவர் கவர்னரின் விருந்தினராகத் தங்கியிருக்கிறார்.

---

### பிரிகேடியர் ராஜா கருத்து

பம்பாய், ஏப். 9

காங்கோ பிரச்னைக்கு விரைவில் தீர்வு ஏற்படும் என பம்பாய் நகரசபை தமக்களித்த ஒரு வரவேற்பில் பிரிகேடியர் ராஜா கூறினார்.

---

### கத்திக்குத்துக்கு பலியானார்

ஹன்வெல, திங்கள்

ஹன்வெல என்ற இடத்தைச் சேர்ந்த அவிஸ்சிங்கோ என்பவர் கங்கொட என்ற இடத்தில் கத்தியால் குத்தப்பட்டு மரணமானார். இதுசம்பந்தமாக கே. பி. சரதியல் என்பவரைப் பொலிஸார் றிமான்டில் வைத்துள்ளனர்.

---

### டில்லி நகர மேயர் நூர்தீன்

புதுடில்லி, ஏப். 9

டில்லி நகர மேயராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜனப் நூர்தீன் அகமத் இன்று தெரிவு செய்யப்பெற்றார். 86 அங்கத்தவர்களைக் கொண்ட நகர சபையில் 82 பேர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். மேயர் பதவிக்குப் போட்டியிட்ட ஜனசங் அபேட்சகர் திரு. கோத்ராவுக்கு எட்டு வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

---

### டெலிபோன் கோளாறுகள்

புத்தளம், திங்கள்

புத்தளம், சிலாபம் பகுதிகளில் அடிக்கடி 'டெலிபோன்' கோளாறுகள் ஏற்படுவதால் டெலிபோன் உபயோகிப்பவர்களுக்குப் பெரிதும் கஷ்டம் ஏற்படுகின்றது. கடந்த வாரத்தில் மூன்று நாட்களாக புத்தளம் - சிலாபம் தொலைபேசித் தொடர்புகள் பழுதடைந்திருந்தன.

தந்திக் கம்பிகள் களவாடப்படுவதாலேயே டெலிபோன் தடங்கல்கள் ஏற்படுவதாகப் புத்தளம் டெலிபோன் நிலையத்திலுள்ள அதிகாரிகள் கூறுகின்றனர்.

# வயதைக் குறைத்து சொல்லி விவாகம் செய்தார்

## எதிரிக்கு தண்டனை

களுத்துறை, திங்கள்

17 வயதுப் பெண்ணை 22 வயதுப் பெண் எனக் கூறி விவாகப் பதிவு செய்துகொண்ட குற்றத்துக்காக சுமதிபாலா என்னும் பொலிஸ் உத்தியோகஸ்தர் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் மூன்பு பயிற்சி பெற்ற சுமதிபாலா களுத்துறை விவாகப்பதிவு அதிகாரிக்குத் தமது மணப்பெண்ணின் வயதைக் கூட்டிச் சொல்லி விவாகப்பதிவு செய்தார். 17 வயதுமட்டும் அடைந்திருந்த நேய் ஹாமிடன் என்னும் பெண்ணுக்கு 22 வயதாகி விட்டதாகப் பொய்சொல்லி விவாகம் செய்துகொண்டார்.

மேற்படி குற்றத்துக்காக சுமதிபாலா ரூபாய் 100 அபராதஞ் செலுத்தும்படி கேட்கப்பட்டுள்ளார். நீதிமன்ற விசாரணை முடியும்வரை இவருக்கு சிறைவாசமும் விதிக்கப்பட்டுள்ளது.

### தமிழ் நாட்டில் இரு கட்சிகள் இணைந்தன

சென்னை, ஏப்ரல் 9

தமிழ்தேசியக்கட்சியும் தமிழ்நாடு சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியும் ஒன்றாக இணைந்துவிட்டன. தமிழ் தேசியக் கட்சி என்ற பெயரில் இனி இந்தக் கட்சி செயல்படும்.

தமிழ் தேசியக்கட்சித்தலைவர் திரு. ஈ. வி. கே. சம்பத்தும் சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சித்தலைவர் திரு. ஸி. ஸி. அந்தோனிப்பிள்ளையும் நேற்று மாலை சந்தித்து இறுதிப் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின் இருகட்சிகளின் இணைப்பு பற்றி அறிவிக்கப்பட்டது.

இணைப்புக்கட்சியின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சம் இருக்குமென்று கூறப்படுகிறது.

### வீணியவரை கண்ணகை அம்மன் கோவிலில் விசேஷ அபிஷேகமும் அலங்கார உற்சவமும்

அன்புடையீர்!

நிகழும் பிலவ ஞூ பங்குனி மீ 31-ந் திகதி (13-4-62) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், பின் சங்கீதகதாப் பிரசங்கமும் நிகழும். பின்னர் பூவால் அலங்கரிக்கப்பெற்ற சிங்கவாகனத்தில் அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்குக் காட்சி அளிப்பாள். அவ்வமயம் அம்பாளைத் தரிசித்து அநுக்கிரகத்தைப் பெற்று ஏகுமாறு வேண்டப்படுகின்றனர்.

**விசேஷ நிகழ்ச்சி**

புலவர் திரு. ம. பார்வதிநாதசிவம் அவர்கள் **சமயமும் வாழ்க்கையும்** என்னும் பொருள்பற்றிப் பேசுவார். இலங்கை வானொலிப் புகழ் திரு. சீ. விஞசித்தம்பி அவர்கள்

**பட்டினத்தடிகளார்**

என்னும் விஷயம்பற்றி தகுந்த பக்கவாத்திய சகிதம் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்கள்.

வயலின்: பிரம்மஸ்ரீ எஸ். வைத்தீஸ்வர ஐயர் அவர்கள். மிருதங்கம்: திரு. எம். என். செல்லத்துரை அவர்கள், ஜயாத்துரை ஜெயமணிதேவி (திரு. எம். என். செல்லத்துரை அவர்களின் பிரதம சிஷ்யை). மேளக்கச்சேரி: உருத்திராபதி செட். தீப்பந்தவிளையாட்டு: பொ. மயில்வாகனம் அவர்கள். விசேஷ ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

இங்ஙனம்

மாவிட்டபுரம். வ.சின்னத்தம்பி

29-3-62. நவரெத்தினம்

உபயகாரர்

கூப்பன் இல: 1

### வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..............................

கல்லூரி ..............................

எனது பெயர் ..............................

விலாசம் ..............................

* இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.


புகழ் மணக்கும் சித்திரைப் புத்தாண்டின் விருந்து!

மக்கள் கண்குளிர இதயம் மகிழ வருகிறது !!

சினிமாஸ் திரைகளில்

இலட்சியம்! தியாகம்!! ஏக்கம்!!!

மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!

சிவாஜி கணேசன்

பி. சரோஜாதேவி

எம். ஆர். ராதா

சௌகார் ஜானகி



வி. நாகையா – டி. எஸ். பாலையா

மனோரமா - கருணாநிதி

ஆகியோர் நடித்த

சரவண பிலிம்ஸ்

பாலும் பழமும்

சங்கீதம் — விஸ்வநாதன்-ராமமூர்த்தி

டைரக்ஷன் ஏ. பீம்சிங்

3-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)

சித்திரா – அசாத் நடித்த

ஜிம்போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30-க்கு

எம். ஆர். ராதா – சௌகார்ஜானகி நடித்த

உலகம் சிரிக்கிறது

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு

சத்தியன், பிரேமா நடித்த

நீலக்குயில்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது